# ஆனந்தப் பிரவாகம்



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

பிரதி அதிபர்

## திரு. இளையதம்பி ஆனந்தநடராசா

அவர்களின்

## மணிவிழா மலர்

16.06.2014

# ஆனந்தப் பிரவாகம்

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

பிரதி அதிபர்

திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களின்

## மணிவிழா மலர்

16.06.2014

**மலரின் பெயர்**

ஆனந்தப் பிரவாகம்

**வெளியீடு**

மணிவிழாக் குழு

**மலராசிரியர்**

என்.தனுசுஜன்

**மலர்க்குழு**

திரு.ந.குகபரன்

திரு.த.நித்தியானந்தன்

திரு.க.சிவாகரன்

திரு.க. சிவசங்கர்

செல்வி ந.தர்சனா

**பதிப்பு**

ஆனி 2014

**பக்கங்கள்**

88

**அச்சழகு**

கரிகணன் (தனியார்) நிறுவனம்

# யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

## பிரதி அதிபர் திரு. இ. ஆனந்தநடராசா அவர்களின்

# மணிவிழாக் குழு

**போஷகர்**

திரு. கு. விமலன் (அதிபர்)

**தலைவர்**

திரு. கு. ஜெகநாதன் (ப.மா.ச செயலாளர்)

**செயலாளர்**

திரு. என். தனுசுஜன் (ப.மா.ச பொருளாளர்)

**பொருளாளர்**

திரு. க. சிவாகரன் (ஆசிரியர்)

**மணிவிழா செயற்குழு**

திரு.ந. குகபரன் (ஆசிரியர்)

திரு.சி.சரூபன்

திரு.ந.தீபறுக்சன்

திரு.க. சிவசங்கர் (ஆசிரியர்)

திரு.கு.கிரிசாந்

திரு.த.நித்தியானந்தன் (ஆசிரியர்)

திரு.கு. தயாபரன் (ஆசிரியர்)

திரு.இ.விஜயகுமார்

திரு. தே.சுதர்சன்

திரு. இ. வாகீசன்

திரு.மா.குணரட்ணம்

திருமதி.செ. சிவலிங்கம் (பா.அ.கு செயலாளர்)

திருமதி. ச.சிவானந்தன் (பகுதித் தலைவர்)




# உட்பொதிவு


- முடி சூட முன்னொரு முன்னுரை 07
- வாழ்வும் பணியும் 09
- செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி 10
- ஆலய குருக்களின் ஆசியுரை 11
- மனம் நிறைந்த வாழ்த்துக்களோடு 12
- மறைக்கோட்ட முதல்வரின் வாழ்த்து 13
- ஆண்டு நூறு ஆனந்தமாய் வாழி 14
- வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து 15

- பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து 16
- பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி 17
- கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து 18
- முன்னாள் அதிபரின் வாழ்த்து 19
- முன்னாள் அதிபரின் வாழ்த்துச்செய்தி 20
- ஓய்வு இல்லாது உழைக்கும் பிரதி அதிபர் 21
- மணிவிழாக்காணும் நாயகனை வாழ்த்துகின்றோம் 22
- பிரதேச செயலரின் வாழ்த்து 24
- மகிழ்வுடன் சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும் 25
- கிராம அலுவலரின் வாழ்த்து 26
- பகுதித் தலைவரின் வாழ்த்து 27
- மணிவிழா நாயகன் 28
- என் இதயம் தொட்ட சில வரிகள் 29
- சகல மாணவர்களின் முன்னேற்றத்திலும் 30
- பழைய மாணவர் சங்க செயலாளரின் வாழ்த்து 31
- ஆசிரியர் நலன்புரிக் கழகத்தின் வாழ்த்து 32
- மாணவர்களின் கலங்கரை விளக்கு 33
- திரு.இ.ஆனந்தநடராசா அவர்களின் சமூக மற்றும் கல்விப்பணி 35
- ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் வாழ்த்துச் செய்தி 37
- தெற்கின் தீர்க்கதரிசி 38
- A.E. ஆனந்தநடராசா ஆசிரியர் அவர்கள் பலாங்கொடை மண்ணுக்கு ஆற்றிய சேவைகளின் சில துளிகள் 40
- தள்ளி நீயும் போகாதே 42
- ஆசிரியருக்கு ஒரு வழிகாட்டி 43
- ஆனந்த நாட்கள் 45
- கல்வியுலகில் ஓர் ஆனந்தம் 46

Acknowledgement to "Ananthan" 49

ஆனந்த ஜோதி 50

JUST ONE MINUTE ABOUT ANANDAN SIR 52

நிழற் பிரதி தாராயோ 53

தோளில் சுமந்த என் தந்தை 54

மாறாத தடங்கள் 56

மேற்கை விரும்பாத நாட்கள் 57

அமிர்த வேந்தன் 61

அகல் விளக்கின் ஒளியில் ஆனந்தம் 63

கண்டங்கள் கடந்து நின்று நன்றியுடன் வாழ்த்துகின்றேன் 65

என் வாழ்வின் வேத ஆறு 67

நவீன குருகுல நாதன் 68

நெஞ்சில் நிற்பவை 70

அர்த்தமுள்ள அறுபதுகள் 71

நாங்கள் கடன்காரர்கள் 73

சோம்பலறியாச் சுடர்விழியோன் 74

உங்கள் மணிவிழாவில் எங்கள் ஆனந்தம் 76

முத்தமிழின் முகவரி 79

எம் கல்லூரித் தாய்க்கு உன்னத பணி செய்தீர் 81

மாணவ முதல்வனின் வாழ்த்து 83

வாழ்த்திடுவோம் ஆசானை 84

இனிய நல்வாழ்த்துக்கள் 85

அன்பு ஆசான் 85

எம் ஆசான் 86


எமது கல்லூரியில் நடமாடும் தெய்வம் 87

# எங்கள் பிரதி அதிபர்



**திரு. இளையதம்பி ஆனந்தநடராசா**

Soc.Trd.B.A.Dip. in Edu.,MA(Tamil)





**மலராசிரியர்**
என்.தனுசுஜன்

# முடி சூட முன்னொரு முன்னுரை

**தி**சைகளைத் தீட்டித் திருத்தி தீபம் ஏற்றி வைத்த நாயகனுக்கு இன்று அகவை அறுபது. மணிவிழா என்பது வயதுக்குச் செய்யும் வாழ்த்தல்ல, பணிக்குச் செய்யும் பாராட்டு. தான் பணி செய்யும் மாணவ சமுதாயத்தின் கல்வித் தொண்டு மட்டுமன்றி குடும்பத்தவரோடு சேர்ந்து சொந்தம் கொண்டாடிய ஒரு மனிதனை வரலாறு மறந்துவிடாது. தன் கடமை நேரத்துக்கு மேலாகவும் ஓய்வைப் புறந்தள்ளி மாணவர் பணிக்கென தன் மணித்துளிகளைச் சொரிந்த மனிதன். ஊதியத்துக்காக மட்டுமே உழைத்த ஒருவரல்லர், தன் ஆசிரியப் பணியை மனிதகுலநேசத்தின் பணியாக கருதியவர். தன் சேவையை வகுப்பறையோடும் மணி ஒலிக்கும் ஓசையோடும் மட்டுமே முடித்துக் கொண்ட ஒருவராக இருந்திருந்தால் மணிவிழா என்பது அத்தனை பொருத்தமாயிருந்திராது. கல்லூரி முடிந்து வீடு சென்று மீண்டும் கல்லூரிக்கு வருவார், விடுமுறை நாட்களிலும் கல்லூரியில் பணி செய்வார். மாலை ஆறு மணியைத் தாண்டி விடும் இங்கிருந்து தன் வீடு புறப்பட.

1954 இன் வித்து இப்போது பல விருட்சங்களை உருவாக்கியிருக்கின்றது. மலையகத்திலும் யாழிலும் ஏராளமான மாணவர்களைத் திரும்பும் திசையெல்லாம் உருவாக்கிவிட்டார். 37 வருடங்கள் அரச பணி செய்தார் என்பது ஓர் நெடுந்தூர பயணம் தான். இந்த

நாட்களில் எண்ணரிய நற்செயல்களை செய்திருக்கின்றார். 19 வருடங்கள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் சேவை செய்து சண்டிலிப்பாய் கிராமத்துக்கும் அயற் கிராமத்துக்கும் அறிவாலும் அன்பாலும் வெளிச்சமேற்றியிருக்கிறார். ஆசிரியரில் இருந்து பிரதிஅதிபர் என்ற நிலையைத்தொட்டபோதும் பணியில் கனிவிருந்ததே தவிர கடினமிருந்ததில்லை.

இவர் சமூக மரியாதைக்குரியவர் என்பதற்கு சான்றுகளுண்டு. மணிவிழாவுக்காக நிதி சேகரிக்கச்சென்ற போது ஒரு கிராமத்தில் இவருக்கான வரவேற்பு கண்டு வியந்து போனேன். இன்னோர் கிராமத்தில், "தங்கள் ஊர் வாசிகசாலைக்கு ஐம்பது ரூபா கூட தரத் தயங்கிய மக்கள், ஆனந்தன் சேருக்காக ஆயிரம் ரூபா தருகிறார்களே" என்று சொல்லி அவ்வூர் பழைய மாணவன் என்னருகில் வியந்து நின்றார். இவ்வாறான பெருமைகளைச் சுமக்கும் பெருந்தகைக்கு கற்ற கல்விக்காகவும் நாம் பெற்ற நன்மைக்காகவும் நன்றி கூறும் ஒரு நற்செயலாக இம்மலரை வெளியிட முடிவு செய்தோம்.

கல்லூரி அதிபர் திரு. விமலன் அவர்களின் எண்ணத்தில் இச்செயலைச் செய்து முடிக்க முன் வந்தோம். ஆனந்தநடராசா ஆசிரியரின் பணியும் சேவையும் பலராலும் இங்கு பதியப்பட்டுள்ளது. தங்கள் இதய வீட்டில் அவர் பதித்த தடத்தை படம் பிடித்து இங்கே பதிவு செய்திருக்கின்றனர் பழைய மாணவர்களும் ஏனைய பட்டறிவுப் பயனாளிகளும் பணிநிலை மேலாளர்களும். களத்தில் உள்ள பழைய மாணவர்களும் பெற்றோரும் நிதிப்பங்களிப்பும் ஏனைய உதவிகளும் செய்தனர். இவ்விடயம் அறிந்ததும் புலத்தில் உள்ள மாணவர்கள் பலர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிதிப்பங்களிப்பும் மலராக்கங்களும் அனுப்பி வைத்தனர். ஊர் சொல்லும் உங்கள் பேரை, காற்றில் பரவும் உங்கள் புகழை இந்த ஏட்டில் பதிவு செய்தவர்களைப் போல் பதிவு செய்யாமலும் நன்றியில் நனைந்த நெஞ்சோடு வெளியில் இன்னும் ஏராளமானோர் இருக்கிறார்கள் என்பது நாம் நன்கறிந்த உண்மை. எங்கள் கல்லூரி வரலாற்றில் இதுவும் ஒரு சிலையில் எழுத்து. யுகம் யுகமாக இந்த வரலாற்றப்பூ வாடாமல் எல்லோர் கைகளிலும் இருக்க வேண்டும் என்ற தூரநோக்கோடு இங்கு வரிப்படுத்தப்படுகின்றது. எங்கள் பிரதிஅதிபர் செய்து கொண்ட பலன் எதிர்பாராத சேவைக்கு நன்றி கூறி மணிவிழா எடுக்கும் வரலாற்று வாய்ப்பு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிக்கு கிடைத்தமையால் இந்தக் கல்லூரிச் சமூகம் கர்வத்தோடு தன் நெஞ்சு நிமிர்த்தி மகிழ்ந்துகொள்கிறது. இவர் ஓர் வரலாற்றுத் தலைவனாய் கல்லூரியை வலம் வந்த நாட்களை இந்த மலரின் இதழ்களில் பார்க்கலாம். நான் மணிவிழா நாயகனிடம் கற்று, அவரது சேவைச் சிறப்பை சுமந்து வரும் இந்த நூலுக்கு மலராசிரியனாக இருப்பது என்பது அவருக்கே பெருமை. இந்த உச்ச மகிழ்ச்சியில் என் நெஞ்சு நன்றிப் பெருக்கெடுக்கிறது. இந்தப் பிரவாகம் ஓய்ந்துவிடாது. இந்தப் பிரவாகம் காய்ந்து விடாது.



அவரின் பெயரைப் போல் அவரது வாழ்வும் ஆனந்தமானது, வலியிலும் மகிழ்ந்து கொள்ளப் பழகியவர் அவர். அது எங்களையும் ஆனந்தமாக்கியது. இது அவரைச் சார்ந்த எல்லோர் வாழ்விலும் பிரவாகம் போன்று எல்லைகளற்றுப் பெருக்கெடுத்தது என்பதால் அவரின் அறுபது அகவைப் பிறந்தநாளில் **'ஆனந்தப் பிரவாகம்'** என்ற இந்த மலரை வெளியிடுவதில் மணிவிழாக் குழுவினராகிய நாம் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டு நிறைவடைகிறோம். இந்தப் பிரபஞ்சத்தில் இந்தப் பிரவாகம் எப்போதும் ஆனந்தமானது, எப்போதும் அழகானது. இம்மலரின் செழுமைக்கு அணி சேர்த்த அத்தனை பேருக்கும் எம் மனம் நிறைந்த நன்றி.

# வாழ்வும் பணியும்



**பெயர்** : இளையதம்பி ஆனந்தநடராசா

**தந்தை** : ஆறுமுகம் இளையதம்பி

**தாய்** : இளையதம்பி அன்னப்பிள்ளை

**பிறந்ததிகதி** : 16.06.1954

**பிறந்த இடம்** : கந்தரோடை, சுன்னாகம்.

**சகோதரர்கள்** : 1. பரமேஸ்வரி நடேசலிங்கம்

2. புவனேஸ்வரி சிவசுப்பிரமணியம்

3. இளையதம்பி தனஞ்செயன்

**மனைவி** : ஆ.வசந்தகுமாரி (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி)

**கல்வி கற்ற பாடசாலைகள்** : யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

**இடைநிலைக் கல்வி** : யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

**சிரேஷ்ட கல்வி** : யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

**கல்வித்தகைமை** : கலைமாணி (B.A) 1991 (தமிழ் , புவியியல், பொருளியல்)

முதுகலைமாணி (M. A) தமிழ் 2009

**முதல் நியமனத் திகதி** : 03.06.1977


**தொழிற் தகைமை** : Dip in Education. சமூகக் கல்வி பயிற்சி,

**சேவை விபரம்** :

| | | |
|---|---|---|
| 01. | இ/றை தமிழ் மகா வித்தியாலயம் (பலாங்கொடை இந்துக் கல்லூரி) | 03.06.1977 - 15.01.1980 |
| 02. | யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை | 16.01.1980 - 31.12.1982 |
| 03. | இ/றை தமிழ் மகா வித்தியாலயம் (பலாங்கொடை இந்துக் கல்லூரி) | 01.01.1983 -17.05.1987 |
| 04. | யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் | 18.05.1987 - 16.01.1995 |
| 05. | யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | 17.01.1995 - 16.06.2014 |

உப அதிபராக - 1997 - 2004


பிரதி அதிபராக -2005 - இளைப்பாறும் வரை



**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.

# செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

ஆளுமையும் அறிவும் நிறைந்த நல்லாசான் ஆனந்தநடராசா அவர்களின் மணிவிழா குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். கடந்த 37 வருடங்களாக அறிவுப்பணியாற்றி ஓய்வு பெறும் சேவையாளருக்கு விழா எடுக்கும் சமூகத்திற்கும் இவ்வேளை நன்றி கூறுகின்றேன். புகழ் பூத்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மைந்தனாகிய விழா நாயகனை யான் நன்கு அறிவேன். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் உன்னத வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றிய இவரை கல்விச் சமூகம் மறக்கமுடியாது. இவரது தூய சேவையை மேலும் வாழ்த்தி, அவரது எதிர்காலம் மேலும் சிறக்க துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறி அமைகிறேன்.






**சிவஸ்ரீ. கு. சோமஸ்கந்தக்குருக்கள்**
சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
சண்டிலிப்பாய்

# ஆலயக் குருக்களின் ஆசியுரை

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றும் திரு. இ. ஆனந்தநடராசா அவர்கள் 37 வருட ஆசிரிய சேவையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 19 வருடங்களாகக் கடமை ஆற்றி பல்வேறு பதவிகளைப் பெற்று மாணவர்களுக்குத் தமிழ், புவியியல் சமூகக்கல்வி என்பன கற்பித்து ஏராளமான மாணவர்களை உருவாக்கி தற்போது 16.06.2014 திங்கட்கிழமை ஓய்வு பெறுகின்றார். இவரது சேவையைக் கௌரவித்து மணிவிழா மலர் ஒன்றை வெளியிட்டுள்ளார்கள். இந்த மலர் சிறக்க எல்லாம் வல்ல நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகிறேன்.

சுபம்





**வணபிதா .J.A. ஜேசுதாஸ்**
அதிபர்
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை

# மனம் நிறைந்த வாழ்த்துக்களோடு

யாழ். மாவட்டத்தில் பல துறைகளிலும் வளர்ச்சி கண்டு வரும் பாடசாலைகளில் ஒன்றான சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக 2005ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அர்ப்பணிப்புடன் பணியாற்றி இன்று மணிவிழாக் காணும் நாயகன் ஆசிரியர் திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களை உளம் மகிழ்ந்து உவப்புடன் அவர் பணிநயந்து வாழ்த்தி நிற்கின்றேன்.

03.06.1977 இல் கல்வியுலகில் தடம்பதித்த இவர், தனது விடாமுயற்சியினாலும் கல்வியில் வளரவேண்டுமென்ற உயர்ந்த கொள்கையினாலும் பயிற்றப்பட்ட சமூகக்கல்வி ஆசானாகவும் கலைமாணி, முதுகலைமாணி போன்ற கல்வித் தகைமைகளையும் பட்டப்படிப்பின் பின்னர் கல்வி டிப்ளோமா போன்ற தொழிற்தகைமைகளையும் பெற்று சிறந்த கல்விமானாகினார். சிறப்பான தனது ஆசிரியப்பணியினால் மாணவர் பலரை புடமிட்டவர். வடக்கில் மட்டுமன்றி தெற்கு நோக்கியும் இவரின் ஆசிரியப்பணி விரிந்திருந்தது. 37 வருடங்கள் தனது உயர்வான சேவையினால் கல்வியுலகில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்தவர் எனில் மிகையில்லை.

1995 முதல் இன்றுவரை ஏறக்குறைய 19 வருடங்களாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசானாய், பகுதித் தலைவராய், உப அதிபராய், பிரதி அதிபராய் கடமை புரிந்து வந்த இவர் கல்லூரியின் பல்வேறு படிநிலை வளர்ச்சிகளிலும் மிகவும் உறுதுணையாய் இருந்துள்ளார். மாணவர்கள் பலரின் உயர்ச்சியில் இவரின் பங்கு "இலைமறைகாய்" என்பது நாம் அறிந்த விடயமே.

பொறுப்பு வாய்ந்த ஆசிரியப் பணியைச் சிறப்பாகச் செய்தீர். எதிர்காலச் சிற்பிகள் பலரை பொறுப்போடு உருவாக்கினீர். பாரினில் உம்பணி மேலும் தொடர வேண்டும் உம்பணி வேண்டுவோர்க்கு உவந்து நீர் உதவ வேண்டும் நின்பணி எம்மவர்க்கு மேலும் கிடைத்திடவும், எங்கும் உறையும் இறைவன் அருள் நிறைவாகப் பெற்றிடவும் ஆசித்து நிற்கின்றேன். இறைவன் துணையுடன் மேலும் பல்லாண்டுகள் நீங்கள் வளமுடன் வாழ்ந்து இன்புற்றுக் களிக்க வேண்டும்.

வாழ்க வளமுடன்..........

வளர்க உங்கள் பணி..........


தொடர்க உங்கள் சேவை........




இந்துக் கல்லூரி
Hindu
Prize
COLLEGE


1
2 SHC 3





**வணபிதா.ச. இயூஜின் பிரான்சிஸ்**
இளவாலை மறைக்கோட்ட முதல்வர்

# மறைக்கோட்ட முதல்வரின் வாழ்த்து



வலிகாமத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி கல்வி வழங்குவதில் முன்னணியில் திகழ்கின்ற பாடசாலை. இக் கல்லூரியில் பிரதி அதிபராக பணி செய்து மணிவிழாக் காணும் திரு. இ. ஆனந்தநடராசா அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

37 வருட ஆசிரியப் பணியில் 19 வருடங்கள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்காக அர்ப்பணித்தார். இந்தக் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அதில் வெற்றியும் பெற்றார். இவருடைய பணியினால் மாணவர்கள் பலர் பல்கலைக்கழகம் சென்று உயர் தொழில் நிலைகளில் உள்ளமை போற்றுதற்குரிய விடயமாகும்.

கல்வி, நிர்வாகம் என இப்பாடசாலையின் செயற்பாடுகள் அனைத்திற்கும் அதிபருக்கு உறுதுணையாக செயற்பட்டவர். சண்டிலிப்பாய் பிரதேசத்தில் கல்விமான்களை உருவாக்க வித்திட்ட செகராஜசிங்க முதலியாரின் கனவை நனவாக்க இரு தசாப்தங்களாகப் பணி செய்து கல்விப் புலத்தை முன்னேற்ற அரும்பாடுபட்டவர்.

இவருடைய ஓய்வு காலத்தில் குடும்பத்தோடு இன்புற்று பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.



**வ.செல்வராசா,**
மாகாணக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வுநிலை)
வட மாகாணம்.

# ஆண்டு நூறு ஆனந்தமாய் வாழி


*ஆறொன்பதாண்டு ஆனியிலே அவதரித்து*
*அகவை இருபத்து மூன்றில் ஆசானாகி*
*பல்லாண்டு காலம் பாங்கான பணியாற்றி*
*பணி நிறைவு காணும் நடராசா வாழி!*

*பலாங்கொடை இந்துவில் பணி தொடங்கி*
*பல்லாண்டு காலம் பள்ளிகளிற் பணியாற்றி*
*பன்னூறு மாணவர்க்கு பாடம் புகட்டி நல்ல*
*பண்புடைய மாந்தர்தமைப் படைத்தாய் வாழி!*

*1977ஆம் ஆண்டு 23 வயதிலே ஆசிரியராகப் பலாங்கொடை இந்துக் கல்லூரியிலே பணி தொடங்கி சேவையில் நிறைவு காணும் திரு.இ.ஆனந்தநடராசாவை வாழ்த்துவதிற் பெருமிதமடைகிறேன்.*

*திரு.இ.ஆனந்தநடராசா அறிவும், ஆற்றலும் விடாமுயற்சியும் உடைய ஆசிரியர்களில் ஒருவர். ஆசிரியராக பலாங்கொடை இந்துக் கல்லூரியிலே இணைந்த இவர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலே இணைந்து சமூகக் கல்விப் பாடத்திற்கான பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். அதன் பின்னரும் அவர் தனது கல்வியைத் தொடர்ந்தார். பல்கலைக்கழகத்திலே பொதுக் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றார். தமிழியலில் முதுமாணிப் பட்டத்தையும் அவர் பெற்றார். கல்வித் தகைமைகளைப் படிப்படியாக உயர்த்திய அவர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் உப அதிபராகவும் பிரதி அதிபராகவும் பதவியுயர்ந்தார். கல்விப் புலத்தில் பாடசாலைகளிலே பல்வேறு பதவிகளைச் சுமந்த அவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.*

*சுபம்*



**செல்வரட்ணம் சந்திரராஜா,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து

*யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றித் தனது அறுபதாவது வயதிலே ஓய்வு பெறுகின்ற திரு.இ.ஆனந்தநடராசா அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*தனது இருபத்து மூன்றாவது வயது முதல் கடந்த 37 வருட காலம் கல்விச் சேவையினை மேற்கொண்டுள்ளார். சமூகக்கல்விப் பயிற்சி ஆசிரியரானார். 1977ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற இவர் முதன் முதல் தனது சேவையினை வெளிமாவட்டத்தில் மேற்கொண்ட போதிலும் பின்னர், எமது வலயத்திலேயே பெரும் பகுதி சேவையினை மேற்கொண்டுள்ளார். 19 வருட காலம் யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் கடமையாற்றி அப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுள்ளார்.*

*ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராகக் கடமைகளைச் செம்மையாகச் செய்த திருப்தியுடன் தனது அறுபதாவது வயதிலே இளைப்பாறும் திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் தனது ஓய்வு காலத்தில் குடும்பத்தினருடன் சகல வளங்களையும் பெற்று மகிழ்வுடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.*



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



**திரு.பொ.ரவிச்சந்திரன்**

பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்)

வலிகாமம்.

# பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றி 16.06.2014 இல் ஓய்வு பெறுகின்ற திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் மணிவிழாக் காண்பதனையிட்டு மகிழ்வடைவதுடன், எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தனது அறுபது வருட வாழ்விலே பெரும்பகுதியை அதாவது 37 ஆண்டுகளை கல்விச் சமூகத்திற்காக அர்ப்பணித்துள்ளார் என்றால் மிகையாகாது. இக்காலத்திலே ஆசிரியராக, பிரதி அதிபராக இருந்து மாணவ சமுதாயத்திற்கும், கல்விச் சமூகத்திற்கும் பல சேவைகளை செய்தவர். மாணவர்களது கல்விக்கு உரமூட்டி அறிவு ஒழுக்கம் நிறைந்த கல்விச் சமூகத்தினை உருவாக்கிய இவர் தனது ஓய்வு காலத்திலும் கல்விச் சமூகத்துக்குத் தன்னாலான பணியை வழங்க இறையாசியை வேண்டி நிற்பதுடன், தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் சகல வளங்களையும் பெற்று இன்பமாக வாழ வாழ்த்துகின்றேன்.





**திரு.சி. கந்தசாமி,**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வி முகாமைத்துவம்.


# பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் 37 வருடங்கள் கல்விச் சேவை புரிந்து ஓய்வு பெற்றிடும் இவ்வேளையில் அவரின் சேவையினை நினைவுகூர்ந்து அவருக்கான சேவை நயப்பினைக் கொண்டாடும் இவ்வேளையில் அவரை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மனம் மகிழ்கின்றேன்.

யாழ். மாவட்டத்தில் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றாகிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராகக் கடமையாற்றி இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்களில் ஒருவராவார். இக்கல்லூரியில் தமிழ் பாடத்தினை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கற்பித்து நல்ல பெறுபேற்றினைப் பெறுவதற்கு வழி சமைத்தார். தனியே மாணவர்களுக்கு கற்பிப்பதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களுக்கு நல் ஆலோசனைகளைக் கூறி அவர்கள் சமூகத்தில் உயர்ந்த மனிதர்களாக வருவதற்கு வழிகாட்டியாகவும் இருந்தவர்.



பாடசாலை நிர்வாகத்தில் அதிபருக்கு உதவியாகவும் நல் ஆலோசனைகளைக் கூறுபவராகவும் இருந்துள்ளார். இவரது வழிகாட்டலில் இக் கல்லூரி நிர்வாகம் உயர்வு பெற்று விளங்குவதைக் காணலாம். தமிழ்மொழித்திறன் போட்டியில் இக் கல்லூரி மாணவர்கள் வலயம், மாகாணம், தேசியநிலைகளில் பங்குபற்றி வெற்றி பெறுவதற்கும் காரண கர்த்தாவாக இருந்துள்ளார். அத்தோடு நேரம் காலம் பாராது சேவை மனப்பாங்குடன் பணியாற்றிய நல்லாசானது ஓய்வு காலம் சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.



**திரு. ச. சிவானந்தராசா**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
சண்டிலிப்பாய்.

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து

திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள்சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த 19 வருடங்களாக தமது அர்ப்பணிப்பான சேவையை செய்து 60 ஆவது அகவையில் மணிவிழாக் காண்பதுடன் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்புச் செய்தவர். பாடசாலையின் என்ன தரவுகளாக இருந்தாலும் எங்கிருந்தாலும் உடனுக்குடன் வழங்கி பாடசாலைக்கும் நிர்வாகத்திற்கும் பெரும் பணியாற்றியவர். இப்பாடசாலையில் மூன்று அதிபர்கள் நிர்வாகம் நடத்தியபோதெல்லாம் நிர்வாகம் சிறப்புற நடக்க உதவியவர்.

மாணவரின் ஒழுக்க நடவடிக்கையில் மிகக் கவனத்துடன் பணியாற்றியதுடன் இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்தி வெற்றி கண்டவர். இவரது ஓய்வு பாடசாலைக்குப் பெரும் இழப்பாகும். திரு. இ. ஆனந்தநடராசா ஓய்வு காலத்தில் கல்விச் செயற்பாடுகளிலும், சமூக மேம்பாட்டிற்காகவும் உழைக்க வேண்டி, கல்விச் சமூகத்திற்காக ஆற்றிய சேவையைப் பாராட்டி உரிய காலத்தில் குடும்பத்தினருடன் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.





**திரு. ச. சிவநேஸ்வரன்**
அதிபர்
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி

# முன்னாள் அதிபரின் வாழ்த்து

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் திரு. இ. ஆனந்தநடராசா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

"ராஜா ஸ்கூல்" என்ற பாடசாலை இன்று சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக மறுமலர்ச்சியடைந்த காலப்பகுதியில் என்னுடன் ஒரு ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராக பல்வேறு பதவிகளை வகித்ததுடன் கல்லூரியின் ஒவ்வொரு பணியிலும் தனது காத்திரமான சேவையினை வழங்கியவர். கல்லூரிக்காக காணிகள் கொள்வனவு செய்தது முதல், முதன் முதலாக ஆரம்பித்த உயர்தர வகுப்பிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றது வரை ஆனந்தநடராசா என்ற சிற்பியின் கரங்கள் பதியாத இடங்கள் இல்லை எனலாம்.

ஒரு கருமத்தை அவரிடம் ஒப்படைத்தால் அது முழுமையடையும் வரை ஓயாது சுறுசுறுப்பாக இயங்கும் ஒரு கல்விப் போராளி இவர். ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் என அனைவரையும் பாடசாலை மேம்பாடு கருதி செயற்பட வைக்கும் அவரின் செயற்றிறன் பாராட்டத்தக்கது. இன்று யாழ்ப்பாணக் கல்விப் புலத்தில் முத்திரை பதித்து நிற்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தன் பங்களிப்பை வழங்கிய திரு. இ. ஆனந்தநடராசா அவர்களின் ஒய்வு கல்லூரிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாக அமையப் போகிறது. கல்லூரியின் இன்றைய மேன்மைக்கு உதவிய திரு. இ. ஆனந்தநடராசாவுக்கு நன்றி கூறுவதுடன் அவரின் ஒய்வுக் காலம் மகிழ்வாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.





**வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்**
முன்னாள் அதிபர்
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
(ஓய்வு நிலை அதிபர் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி

திரு. ஆனந்தநடராசா அவர்கள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை இரண்டு தசாப்தங்களாகத் தன் உள்ளங்கைகளில் ஏந்தி வைத்திருந்தவர். தன் அர்ப்பணிப்பான பணிகளினால் கல்லூரி சார்ந்த பிரதேசங்களில் உள்ளவர்களின் மனதில் பிரகாசித்துக் கொண்டிருப்பவர். 'ஆனந்தன் சேர்' என அன்புடன் அனைவராலும் விளிக்கப்படுபவர். நேரத்திற்கு வந்து நேரத்திற்குச் திரும்பிச் செல்லும் அதிகளவான அரச ஊழியர்களில் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டவர். எந்த வேளையிலும் தன் பணியிடத்திலும் தன் மாணவருடனும் தங்கியிருந்து கடமை செய்பவர். நான் அதிபராய் இருந்த காலத்தில் பிரதி அதிபராக எனது வலக்கரமாய் இருந்து 'கணவனுக்கு வாய்த்த நன் மனைவி போல' சகல விடயங்களிலும் உடனிருந்து செயற்பட்டவர். 2008 ஆம் ஆண்டிலே உயர்தர வகுப்புக்களில் புவியியல் பாடம் கற்க மாணவர்கள் பலர் விரும்பிய போது புவியியல் ஆசிரியர் இல்லாத நிலையிலும் தானே அதனைப் பொறுப்பேற்று கற்பித்து உயர் சித்திகளை பெற வைத்து பல்கலைக்கழகத்திற்கு பிள்ளைகளை அனுப்பிய பெருந்தகை ஆசிரியர். 'எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான் இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன்' எனப் பாரதியார் பாடியது போல் நண்பனாய், மந்திரியாய் நல்லாசிரியனாய், பண்பாளனாய், சேவகனாய் யாதுமாய் பணி செய்து கல்லூரியின் உயர்வில் உவகையுறும் உயர் உள்ளம் கொண்ட அவர், மணிவிழாக் காணும் இந்நாளில் தன் அரச பணியில் ஓய்வு பெறும் இவ் வேளையில் இன்று போல் என்றும் இன்பமுடன் வாழ சீரணித்தாயின் பாதம் பணிந்து அன்புடன் வாழ்த்துகின்றேன்.





**திரு. குருசாமி விமலன்**
அதிபர்
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# ஓய்வு இல்லாது உழைக்கும் பிரதி அதிபர்

கல்விப் பணியில் 37 ஆண்டுகள் சேவையாற்றி அகவை அறுபதில் 16.06.2014 அன்று சேவையில் இருந்து இளைப்பாறும் திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த 19 வருடங்களாக எமது பாடசாலையில் ஆசிரியராக, பகுதித்தலைவராக உப அதிபராக, பிரதி அதிபராக பல்வேறு வகிபங்குகளில் தனது கடமையைச் சிறப்பாக ஆற்றி மாணவர்களை வழிப்படுத்தி கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பெரும் சேவையாற்றி உள்ளார். தான் கடமையாற்றிய காலத்தில் பணிபுரிந்த அதிபர்களுடன் இணக்கமான கொள்கைகளைக் கடைப்பிடித்து அவர்களின் எண்ணங்களை செயற்படுத்தி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தன்னாலான முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

எமது பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் இவரது பங்கு அளப்பரியது. காணிக்கொள்வனவு, கட்டடங்களின் உயர்ச்சி, கல்விச் செயற்பாடு, இணைப்பாடவிதானத்தில் பங்களிப்பு எனப் பல செயற்பாடுகளில் இவரின் முத்திரை பதிந்துள்ளது.

மாணவர்களின் ஒழுக்கம் இவரது கண்காணிப்பில் முதலிடம் பெறுகின்றது. ஒரு தந்தை போல மாணவர்கள் ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்பதில் மிகக்கடுமையாகவும் கவனமாகவும் இருந்தார். பாடசாலை நேரத்தில் மட்டுமன்றி ஏனைய நேரங்களில் கூட அவதானித்து மாணவர்களுடனும் அவர்களின் பெற்றோர்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி நல் வழிப்படுத்துவார்.

இவர் மாணவர்களுக்கு உதவுவதில் என்றுமே பின்னிற்பதில்லை. இவரின் உதவி மூலம் மாணவர்கள் பலர் பட்டதாரிகளாகி வெளிவந்து உயர் தொழில்களில் பல்வேறு அரச நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் சிறப்பாகக் கடமையாற்றி வருகின்றனர். அவர்களின் உயர்ச்சியில் மகிழ்வடைபவர். சனி ஞாயிறு என்றும் பாராமல் தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடசாலையிலேயே கடமையாற்றுவார்.

இவரிடம் கடமையுணர்வு, நேரந்தவறாமை, விசுவாசம், உதவிபுரியும் மனப்பாங்கு, முகாமைத்துவம் போன்ற பல்வேறு பண்புகள் நிறைந்து காணப்படுகின்றன. இவர் தனது ஓய்வு காலத்தில் சீரோடும் சிறப்போடும் குடும்பத்தாருடன் மகிழ்வாக வாழ வாழ்த்துகின்றேன்.



**நா.கேதீஸ்வரன்**
அதிபர்
யா/ அருணோதயாக் கல்லூரி

# மணிவிழாக்காணும் நாயகனை வாழ்த்துகின்றோம்



''நல்லோர் வரவால் நகைமுகம் கொண்டு இன்புறீகி, அல்லோர் வரவால் அழுங்குவோர் - வல்லோர்...'' எனும் நன்னெறியின் கூற்றுக்கமைய இன்று மணிவிழாக் கண்டு தனது அறுபதாவது வயதில் ஒய்வு பெற்றுச் செல்லும் திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்கள் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராகப் பணியாற்றி விடை பெறுகின்றார்.

1977.06.03 இல் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் சமூகக் கல்விப்பாடப் பயிற்சி பெற்றவராக இருந்த போதும் பல்துறை சார்ந்த புலமையாளராக விளங்கி மாணவச் செல்வங்களை அரவணைத்து கல்வி போதித்தவர். தன்னுடைய கல்வியறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனும் நோக்கில் 1991 இல் கலைப்பட்டதாரியாகவும் 2009 இல் தமிழில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். இயல்பாகவே தமிழ் மொழி சார்ந்த பாடத்தில் திறமை பெற்ற இவர் தமிழ்ப் பாடத்தை சுவைபடக் கற்பிப்பவர். இவை மட்டுமன்றி பொது பரீட்சைகளான க.பொ.த. (சா.த), (உ.த) பரீட்சைகளின் மேற்பார்வையாளராகவும், விடைத்தாள் மதிப்பீடுப் பணியில் பிரதம பரீட்சகராகவும் பல வருடங்கள் கடமையாற்றியவர்.



இப் பாடசாலையில் 1995.01.17 இல் பொறுப்பேற்ற இவர் முன்பு தாம் கற்பித்த பாடசாலைகளில் ஆசிரியருடைய, அதிபருடைய மாணவருடைய மனங்களில் தன்னுடைய நகைச்சுவை சார்ந்த பேச்சால் இடம் பிடித்துக் கொண்டவர். 1997 இல் உப அதிபராகவும், 2004 இல் பிரதி அதிபராகவும் பொறுப்பேற்று ஆசிரியப் பணியுடன் தனது நிர்வாகப் பணியையும் மேற்கொண்டு வந்தார். தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட நாள் முதல் இன்று வரையும் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் ஆசிரியர்களின் நலனுக்காகவும் தன்னலமற்ற சேவை புரிந்து கொண்டவர்.

"ஒரு கருத்தை கொள்க

அந்த ஒரு கருத்தையே

உனது வாழ்க்கை மயமாக்குக

அதையே கனவு காண்க

அந்த ஒரு கருத்தை

ஒட்டியே வாழ்ந்து வருக

வெற்றிக்கு வழி இதுதான்" சுவாமி விவேகானந்தர் கூறிய கூற்றுக்கிணங்க பாடசாலையின் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு தமது பணியினை செவ்வனே செய்து முடிக்கும் நாயகனாகவே அவர் செயற்பட்டவர்.

இவர் தனது ஓய்வுக் காலத்தில் மனநிறைவும் தேக சுகமும் பெற்று தம் குடும்பத்திலும் சகல சௌபாக்கியங்களும் பெற்று சிறப்புற வாழ இறைவன் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்தித்து மணிவிழா நாயகனை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைடைகின்றேன்.



**சு. முரளிதரன்**
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்,
வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய்

# பிரதேச செயலரின் வாழ்த்து

இலங்கைத் தீவின் வடபாலமைந்த யாழ். நகரின் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள புகழ்பூத்த பாடசாலைகளில் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் ஒன்றாகும். இப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ள பாடசாலையின் பிரதி அதிபராய் பணியாற்றும் திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்கள் தனது சேவையிலிருந்து ஒய்வு பெறுவதையிட்டு இன்று (16.06.2014) அவர்களுக்கு மணிவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் தமது 37 வருட ஆசிரியர் சேவையில் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 19 வருடங்களாக ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக சேவையாற்றி பாடசாலை அபிவிருத்தியில் முன்னின்று உழைத்தவர். குறிப்பாக பாடசாலைச் சமூகத்துடன் ஒன்றிணைந்து பாடசாலையின் பௌதீக வளத் தேவையினை பூர்த்தி செய்வதிலும் பாடசாலையை முன்னேற்றுவதிலும் முன்னின்று உழைத்தவர்.

திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் 03.06.1977 பலாங்கொடை இந்துக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றதன் ஊடாக ஆசிரிய சேவையில் தமது சேவையினை ஆரம்பித்தார். பின் 18.05.1987 முதல் 16.01.1995 வரை யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் கடமையாற்றி பின்17.01.1995 முதல் ஓய்வு பெறும் வரை யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கடமையாற்றினார். இக் காலப்பகுதியில் 1997 முதல் 2004 வரை யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் உப அதிபராகவும் பின் 2005 முதல் இன்று வரை இக் கல்லூரியின் பிரதி அதிபராகவும் கடமையாற்றி அனைவரது நன்மதிப்பையும் பெற்றார்.

இவ் வகையில் பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய பாடசாலை பிரதி அதிபர் திரு. இ. ஆனந்தநடராசா அவர்களுக்கு மணிவிழா நடைபெறுகின்ற இவ்வேளையில் மணிவிழா மலரிற்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் மணிவிழா நாயகனது பணிகள் மேலும் சிறக்க எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**திருமதி.நேசரட்ணம் செல்வகுமாரி,**
உதவிப் பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய்.

# மகிழ்வுடன் சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

தனது ஆசிரிய சேவையில் சீரிய பணியாற்றி குறிப்பாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலே இரு தசாப்த காலமாக ஆசிரியராக, உப அதிபராக, பிரதி அதிபராகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் தனது அறுபதாவது அகவையில் தடம் பதிக்கும் இவ்வேளையிலே மணிவிழா நாயகனை வாழ்த்துவதற்கும், மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டுவதிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவிக்கும் கல்விப் பணி மேலான புண்ணியச் செயல் என்பதற்கு இணங்க கல்விச் சேவையில் தன்னை இணைத்துக் கொண்ட இவர் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியதுடன் மட்டுமல்லாமல் பாடசாலையின் சகல துறை வளர்ச்சிக்காவும் மாணவர்களிடையே நல்லொழுக்கம் போன்ற நற்பண்புகளை வளர்த்தெடுப்பதற்காகவும் மனவுறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றிய ஒரு பெருந்தகை என்பது சண்டிலிப்பாய் கிராமமே அறிந்ததொரு உண்மையாகும். சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் பாரிய வளர்ச்சிப்பாதையிலே இவரின் ஒத்துழைப்பும், விடாமுயற்சியும், தன்னம்பிக்கையுடனான செயற்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது எனக் கூறின் அது மிகையாகாது.



பாடசாலைக் கல்விச் சமூகத்தின் மனதிலே என்றும் இவரின் கல்விப்பணி நிலைத்து நிற்க வேண்டுமென வேண்டுவதுடன் இவருக்கு மணிவிழாக் கொண்டாடும் பாடசாலைச் சமூகத்தினரைப் பாராட்டுவதோடு தனது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தினருடன் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் ஆரோக்கியமாக வாழ்ந்து சமூகப்பணிகள் பல செய்திட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.



**திரு.பு.நிரூபன்**
J/ 142 கிராம அலுவலர்.
சண்டிலிப்பாய் மத்தி.

# கிராம அலுவலரின் வாழ்த்து



பலாங்கொடை இந்துக் கல்லூரியில் தமது ஆசிரியர் பணியை ஆரம்பித்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் தம் பணியை நிறைவு செய்யும் துடிப்பு மிக்க ஆசானாகிய திரு.இ.ஆனந்தநடராசா அவர்களை வாழ்த்த சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு மன நிறைவடைகின்றேன்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக இக்கல்லூரியில் ஆனந்த நடனமாடிய திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் சீரணி நாகம்மாள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர். அதே போல் கல்லூரியிலும் தமது பணிக்கு மேலாக கல்விப்பணி மட்டுமன்றி மாணவர்களின் அனைத்து செயற்பாடுகளிலும் மிகுந்த அக்கறையோடு தன்னலமற்ற சேவையாற்றி தனித்துவமானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர். பெற்றோர்களிடத்திலும் மிகுந்த மதிப்பும் பெற்றவர். இவர் ஓய்வு பெற்றாலும் இவர் ஆற்றிய பணி எப்போதும் நினைவு கூரப்படும். நான் பாடசாலைக்கு தேவை கருதிச் செல்லும் போதெல்லாம் சளைக்காமல் தம் பணியோடு எமது தேவைகளையும் கவனித்துக் கொள்வார். குறிப்பாக வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் அர்ப்பணிப்போடு செயற்பட்ட மகான் ஆவார். இவரின் ஓய்வு கால வாழ்க்கை மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல சீரணி நாகம்மாளை வணங்கி வாழ்த்துகின்றேன்.



**திருமதி. ச. சிவானந்தன்**

பகுதித்தலைவர்

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# பகுதித்தலைவரின் வாழ்த்து

எமது கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றி 16.06.2014 அன்று பணி ஓய்வு பெறுகின்ற திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது கல்லூரியில் கடந்த 19 வருடங்களாக ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக சேவையாற்றுகையில் கல்லூரியின் கற்பித்தல் செயற்பாடுகளிலும், நிர்வாக இணைபாட விதான செயற்பாடுகளிலும், ஒழுக்கம் கட்டுப்பாடுகளிலும் ஆலம் விழுதுகள் போல் கல்லூரியைத் தாங்கி நின்றார். கற்பித்தலில் அன்பாகவும் அரவணைப்பாகவும் ஈடுபட்ட இவர் ஒழுக்கம் கட்டுப்பாடுகளில் மிகவும் கண்டிப்புடனும் நிர்வாக செயற்பாடுகளில் அதிபர் சக ஆசிரியர்களுக்கு தோள் கொடுப்பவராகவும் இணைபாடவிதான செயற்பாடுகளில் பாராட்டுதலுடன் ஆலோசனையும் வழிகாட்டலும் தெரிவிப்பவராகவும் செயற்பட்டார். இவரது பணி ஓய்வு எமக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக இருக்கின்ற போதும் இவரை அன்புடன் விடை கூறி வழி அனுப்புகின்றோம். இவரது ஓய்வுக் காலத்தில் இவரும் இவரது பாரியாரும் நோய்நொடியற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றேன்





**திருமதி. ந. நாகேஸ்வரன்**

பகுதித்தலைவர்

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

# மணிவிழா நாயகன்



எமது பாடசாலையில் பத்தொன்பது வருடங்களாக ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபராகப் பணிபுரிந்து 60 ஆவது வயது பூர்த்தியாகும் வேளையிலே ஓய்வை நாடிச் செல்லும் எமது மதிப்பிற்குரிய திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

மிடுக்கான நடையுடன் பாடசாலையை வட்டமிட்டு அன்பு வார்த்தையால் மாணவர்களைக் கண்டித்து மாணவர்கள் பலரின் முன்னேற்றத்திற்குக் கலங்கரை விளக்காய் விளங்கியவர். தமிழ் ஆசிரியர் என்பதால் இவரிடம் சொல்லுக்குப் பஞ்சமில்லை. நகைச்சுவையாகப் பேசி மகிழவைக்கும் இவர், மற்றவர்களின் துன்பத்தினைக் கண்டு இரக்கம் காட்டும் உயரிய பண்புடையவர். இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காய் இரவு பகல் பாராது தன் வீடு போல் நினைத்து முழுமனதாய் தன்னை அர்ப்பணித்தார். இவரது சேவையை எம்மால் மறக்க முடியாது. இப் பெருமைக்குரியவர் ஓய்வு பெற்றுச் சென்று உடல் உள ஆரோக்கியத்துடன் இனிதே வாழ இறைவனை வேண்டுகின்றேன்.



**திருமதி. சறோஜினி பாலசுந்தரம்**
முன்னாள் பகுதித்தலைவர்
(யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

# என் இதயம் தொட்ட சில வரிகள்...

சண்டிலிப்பாய் இந்துவின் பிரதி அதிபரான திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களின் மணிவிழா மலருக்கு என் இதயம் தொட்ட சில வரிகள். இக் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்து ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அன்பு, அரவணைப்பு, அறிவுரை, கண்டிப்பு, மரியாதை போன்ற பெருமைகளைப் பெற்றவர். யார் கேட்டாலும் எந்த உதவிகளையும் தயங்காது செய்பவர். இரக்க சிந்தையும் தயாளகுணமும் உடையவர்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைப்பவர். கையில் பிரம்புடன் புறப்பட்டால் மாணவர்கள் பெட்டிப்பாம்பாக அடங்கி விடுவார்கள். கண்டிப்புக்கும் அவர் தான். அரவணைப்புக்கும் அன்புக்கும் அவர் தான்.

இக்கல்லூரியில் பத்தொன்பது ஆண்டுகளும் பல படிநிலைப் பதவிகளை வகித்தமையால் ஆசிரியர்கள் மாணவர்களது உளப்பாங்குக்கேற்ப கடமையாற்றும் ஆளுமையுடையவர். இக்கல்லூரியின் அன்புக்குரியவரான இவரின் பணிகளை முழுமையாக இங்கு எழுத முடியாது.



மணிவிழாக் காணும் எமது கல்லூரியின் பிரதி அதிபரான திரு. இ. ஆனந்தநடராசா அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று என்றும் போல முகமலர்ச்சியுடன் வாழ வாழ்த்துகின்றேன்.



**திருமதி.செ.சிவலிங்கம்**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திக் குழு.


# சகல மாணவர்களின் முன்னேற்றத்திலும்..

எமது பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றி 16.06.2014 இல் மணிவிழாக் காணும் திருவாளர் இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க எனக்குத் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டுப் பெருமையடைகிறேன்.

இவர் தனது ஆசிரிய சேவையில் 37 வருடங்களில் 19 வருடங்களாக எமது பாடசாலையில் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பாடசாலை வரலாற்றில் முக்கியத்துவமுடையவராக பாடசாலை முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகித்தவராவர். இவருடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர் என்ற வகையில் 2010 ஆம் ஆண்டுமுதல் நெருங்கிப் பழக முடிந்தாலும் பெற்றோர் என்ற வகையில் 1995 ஆம் ஆண்டு முதல் அவரை நான் நன்கு அறிந்திருக்கிறேன். இவர் சகல மாணவர்களின் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டுவதுபோல எனது பிள்ளைகளின் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டிச் செயற்பட்டவர். இந்த வகையில் எனது மகன் ஒருவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறியுள்ளார். மற்றைய மகன் மாணவனாக யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வருகிறார். பிரதிஅதிபர் மிகுந்த கண்டிப்பு உள்ளவராகவும் பெற்றோர்களும் மாணவர்களைப் போல இவரைப் பணிந்து கனம் பண்ணக் கூடிய ஆளுமை உடையவராகவும் திகழ்கின்றார். வருடாந்தம் பெற்றோர்களைக் கூட்டத்திற்கு சமூகமளிக்கச் செய்து பொதுச்சபையில் ஒவ்வொரு மாணவனது இயல்புகளையும் இனங்கண்டு அவர் தம் முன்னேற்றத்திற்கு வழி காட்டுவார்.

பாடசாலை வேலைக்கப்பாலும் மாணவர்களின் செயற்பாடுகளை அவதானித்து கண்காணிப்பாளராகவும் கண்டிப்பவராகவும் இருப்பார். எடுத்துக்காட்டாக முகப்புத்தகத்தின் பயன்பாட்டில் இருப்பவரைக்கூட கண்காணித்து அவர்களை படிப்பில் கவனம் செலுத்தும்படி குறுந்தகவல் அனுப்புவார். தவிர, இவர் பாடசாலைக் கல்விப் பாடவிதானங்களிற்கும் மேலதிக இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கூடுதல் அக்கறை காட்டுபவராகவும் சனி, ஞாயிறு நாட்களில் பாடசாலைக்கு சமூகமளித்து மேலதிக வகுப்புக்கள், விளையாட்டுப் பயிற்சிகள் போன்ற இன்னோரன்ன மாணவர் தொழிற்பாடுகளையும் கண்காணிப்பார்.

இவரது ஓய்வு எமது பாடசாலைக்கும் பாடசர்லை சமூகத்திற்கும் பெரிய இழப்பாக இருந்தபோதிலும் ஓய்வு என்பது எல்லா மனிதர்களிற்கும் கட்டாயம் கிடைக்க வேண்டியதொன்று என்ற வகையில் இவரது சேவையில் நாம் மனநிறைவடைகின்றோம். அவரது ஓய்வுக்காலம் சிறப்புமிக்கதாய் அமைய எல்லாம் வல்ல நாகபூசணி அம்மனை வேண்டிப் பணிகின்றேன்.



**கு.ஜெகநாதன்**

(ப.மா.ச.செயலாளர்)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,

(ஓய்வு நிலை அதிபர், அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி).

# பழைய மாணவர் சங்க செயலாளரின் வாழ்த்து

*03.06.1977ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று அரச சேவையில் இணைந்து கொண்ட திருவாளர் இளையதம்பி. ஆனந்தநடராசா அவர்கள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 3 நல்ல அதிபர்களின் கீழ் ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபர் ஆகிய பதவி நிலைகளில் உயர்ந்து 19 ஆண்டுகள் இந்துக் கல்லூரியில் சிறந்த சேவையாற்றி 16.06.2014 இல் ஓய்வு பெறுகின்ற நாளில், அதாவது மணிவிழாக் காணும் இந் நன்நாளில் அவர்களை வாழ்த்துவதுடன் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.*

*இவர் தமிழ்ப் பாடத்தில் M.A பட்டம் பெற்றவர். இவர் இக்கல்லூரியில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தமிழ் மொழியைச் சிறப்பாகக் கற்பித்ததன் பேறாக தமிழ் மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாக வெளியேறிய பலர் இன்று பல்வேறு அரச நிறுவனங்களில் பணியாற்றுவதோடு, தமிழ் மொழி ஆற்றல்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி வருவது இவரது தமிழ் மொழிக் கற்பித்தல் சிறப்பை வெளிப்படுத்துகின்றது. அத்தோடு பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்கள் பலருக்கு தனது ஊதியத்தின் ஒரு பகுதியினை வழங்கி அவர்களின் கற்றலை ஊக்குவித்ததுடன் அவர்களில் ஒருவர், உதவி ஆணையாளராக நியமனம் பெற வழிசமைத்து, அவரது திருமணத்தை தானும், மனைவியும் பெற்றோர்களாக இருந்து நடாத்திவைத்த பெருமைக்குரியவர்.*



*இவரின் பணிவாழ்வில் கடமை, கண்ணியம், அர்ப்பணிப்பு, பாடசாலைமீது கொண்ட பற்று, மாணவர் மத்தியில் கொண்ட அன்பு காரணமாக மாணவர்கள் மட்டுமன்றி, பாடசாலைச் சமூகமும் இவர் மீது அணை கடந்த அன்பு கொண்டவர்களாக இருப்பது இவரது சேவைகளின் விளைவாகவே அமைந்துள்ளது.*

*இவருடைய ஓய்வுக்காலம் சிறக்கவும், ஓய்வு காலத்தில் சமூகப் பணிகளிலும், கல்விப் பணிகளிலும், பங்குபற்றி குடும்பத்தவருடன் என்றும் இன்புற்றிருக்க வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*




**திரு. கு. தயாபரன்**
(தலைவர்)
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,
சண்டிலிப்பாய்.

# ஆசிரியர் நலன்புரிக் கழகத்தின் வாழ்த்து

எமது பாடசாலையின் பிரதி அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெறும் திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களின் மாட்சி விதப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.


ஆசிரியப் பணியிலே இணைந்து 37 வருடங்கள் நிறைவுற அவர் ஓய்வு பெறுகிறார். திரு. ஆனந்தநடராசா நல் ஆசிரியராக, நல்ல நிர்வாகியாக விளங்கியவர். பாடசாலையின் அபிவிருத்தியிலும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் அதிக கரிசனை காட்டி வந்தவர்.



மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைபவர். பாடவிதானங்களுக்கும் அப்பால் மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் இருக்க வேண்டும் என்று விரும்பியவர். தான் கற்பிப்பதை மாணவர்கள் எவ்வளவு தூரம் உள்வாங்கிக் கொள்வார்கள் என்பதை உணர்ந்து கற்பித்தவர். திறமை வாய்ந்த ஆசிரியர்களைச் சூழ ஒரு மாணவர் குழாம் இருக்கும் என்பதை இவர் மூலம் கண்டுகொண்டோம்.

ஓயாத படிப்பு, இடைவிடாத வாசிப்பு, இரசனை உணர்வு என்பவை இவருடன் இணைந்து காணப்பட்டமையை நாமெல்லோரும் அறிவோம். நல்ல நகைச்சுவையாளனாகத் திகழ்ந்த இவர் வாழைப்பழத்திலே ஊசி ஏற்றுவது போலத் தம் கருத்துக்களை எம்முள் செலுத்திவிடுவார்.

கல்விப்பணியே கடவுள் பணி எனத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்கள் ஓய்வு காலத்தில் மகிழ்ச்சியுடனும், சுகபலத்துடனும் வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



**R. Vijayakumar**
B.A,BSc, MSc (Reading,) SLAS
Assistant Commissioner,
Department of Agrarian Development
Mullaitivu.

# மாணவர்களின் கலங்கரை விளக்கு

பலாங்கொடை முதல் சுதுமலை ஊடாக சண்டிலிப்பாய் வரையான கடல்களில் பயணித்த பயணிகளாம் மாணவச் செல்வங்களை வழிகாட்டி, கரைசேர வைத்த எனது ஆசான் கலங்கரை விளக்கு திரு. இ. ஆனந்தநடராசா அவர்களின் மணி விழாக் காணும் வைபவத்தில் முத்தான அவர்தம் சேவையினை எடுத்தியம்ப எனக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தரம் 9 இல் தொடங்கி உயர்தரம் வரை அவர் வாயால் நான் கேட்டறிந்த சிலேடைகள் எத்தனையோ இன்றும் என் காதில் வந்தொலித்து தமிழ் மீது நான் கொண்ட பற்றினை மென் மேலும் அதிகரிக்கின்றது. குடு குடு நடையும், துடிப்பான செயற்பாடும் தம் உயரமும், மறவாது என்றும் என் மனதில். கல்விக்காக தன் வாழ்வுதனை அர்ப்பணித்த ஆசான் ஆனந்தநடராசா அவர்கள் பலரின் வாழ்க்கையில் ஆணிவேராய் நின்று தாங்கியுள்ளார். தாங்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். என்னைச் செதுக்கிய மாபெரும் சிற்பி அவர். உயர்தரத்தில் பரீட்சைக்கு வெறும் 8 மாதங்களே எஞ்சியிருந்த நிலையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தை கைவிட்டு பொருளியல் பாடத்தினை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். காரணம் சுற்றுநிருப நிபந்தனைகள் மீதான விளக்கமின்மை.



அன்று எம்மை கைவிட்ட அனைவரின் மத்தியில் தனது சொந்த சம்பளத்தில் பணம் கொடுத்து எமக்கான ஒரு பொருளியல் ஆசிரியரை ஒழுங்குபடுத்தி எட்டே மாதங்களில் A தர சித்தி பெற வைத்த தியாக செம்மல் என் ஆசான். பல்கலைக்கழகத்தில் நான்

செலவிட்ட ஒவ்வொரு ரூபாய்க்கும் வாய் இருந்தால் சொல்லும் பெயர் "ஆனந்தநடராசா". கணனிப் பொறியியலாளராக வரவேண்டும் என்ற என் கனவை நனவாக்கி அதற்காக செலவிட்ட தொகை சொல்லிலடங்காது.

ஆசானும் அவர் தம் பாரியாரும் தந்தையாய் தாயாய் முன் நின்று நடாத்திவைத்த என் திருமணத்தை என்னவென்று வர்ணிப்பது! அப்பேறு யாருக்கும் கிடைக்காத அரும்பேறு. என் துன்பத்திலும் இன்பத்திலும் உறுதுணையாய் என் தாயாய் தந்தையாய் நல்ல தோழனாய் நின்றவர் அவரே. என் கல்வியில், உத்தியோகத்தில் என்னைவிட அதிகம் கனவு கண்டவர் அவரே. என் ஒவ்வொரு வளர்ச்சியிலும் என்னை விட அதிகம் பூரித்த அவரை என் நெஞ்சம் மறவாது என்றும். எப்பொழுதும் நான் என் தாய்வீடெனக் கருதி உரிமையுடன் வருவது அவர் வீட்டிற்குத் தானே. இத்தனை அன்பும் அரவணைப்பும் யாரால் வழங்கமுடியும் என் ஆசானைத் தவிர. இவையனைத்தும் எனக்கு மட்டும் செய்தவைகள். இப்படிப் பல பேருக்கு பல லட்சம் அள்ளிக் கொடுத்து ஆனந்தத்தை இரசித்துப் பார்த்த ஆனந்தம் என் ஆசான். எல்லோருக்கும் வேலை நேரம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7.30 - மாலை 2.00 வரைக்கும். ஆனால் ஆசானுக்கோ திங்கள் முதல் ஞாயிறு வரையும் (குறிப்பு : நேர வரையறை இல்லை) தன்னைப் பாடசாலைக்கே அர்ப்பணித்தவர்.

இவரின் சிறப்பான குணங்களில் ஒன்று எதையும் வெளிப்படையாக திறந்த மனத்துடன் பேசுவதுதான். தந்தைக்கு ஈடாக, நண்பனுக்கு ஒப்பாக நின்று வழிகாட்டிய முதுகலைமாணியாம் எனது ஆசானின் மணி விழா தருணத்தில் அவரை வாழ்க வாழ்க என வாழ்த்தி வையகத்தில் இனி வரும் சவால்களை எதிர்கொள்ள நானும் அவருக்கு ஒரு தூணாக நிற்பேன் என வாழ்த்தி வணங்குகின்றேன்.




திரு. திருமதி ஆனந்தநடராசா தம்பதிகள்



**திரு. இ. விஜயகுமாரன்,**
சிரேஸ்ட விரிவுரையாளர்,
நிதிமுகாமைத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# திரு.இ.ஆனந்தநடராசா அவர்களின் சமூக மற்றும் கல்விப்பணி

திரு.இ.ஆனந்தநடராசா ஆசிரியர் அவர்களின் சேவையைக் கௌரவித்து அவரது பழைய மாணவர்கள் அவருக்கு மணிவிழாக் கொண்டாடுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். திரு. இ. ஆனந்தநடராசா அவர்களை எனக்கு சிறுவயதிலிருந்தே நன்றாகத் தெரியும். அவரை ஒரு நல்ல சமூகப் பணியாளனாகவும் ஆசிரியராகவும் அறிந்து கொண்டேன். அவர் மிகவும் எளிமையாகவும் நகைச்சுவையாகவும் எல்லோருடனும் வேறுபாடின்றிப் பழகும் பண்புள்ளவர்.



மற்றவர்கள் துன்பப்படுவதை பொறுத்துகொள்ள மாட்டார். மற்றவர்களுக்குத் தானாகவே முன்வந்து உதவி செய்வார்.

உடுவில், கந்தரோடை, சங்குவேலி ஆகிய கிராமங்களுக்கு மத்தியில் ஒரு சனசமூக நிலையம் அமைக்கவேண்டும் எனப்பாடுபட்டு அதை வெற்றிகரமாக நிறைவேற்றினார். இப்பொழுது அது ஒரு பெரிய விடயமாகத் தெரியமாட்டாது. ஆனால் 80 களில் உண்மையில் ஒரு சனசமூக

நிலையத்தையோ, சிறுவர் பாடசாலையையோ அமைப்பது என்பது ஒவ்வொரு கிராமத்துக்கும் ஓர் பெரிய சவாலாகத்தான் இருந்தது. அதுமட்டுமன்றி சமூக முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பல பணிகளை சிறப்பாகச் செய்து வருகின்றார்.

ஆன்மீகப் பணியிலும் ஈடுபாடுள்ளவர். ஆரம்ப காலத்தில் உடுவில் கற்பொக்கணை விநாயகர் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து அதனை ஓர் ஆலயமாக மிளிரச் செய்வதிலும் முன்னின்று செயற்பட்டவர். கிராமத்து இளைஞர்களையும் சிறுவர்களையும் ஒன்று சேர்த்து திருவெம்பாவை பாடத் தூண்டினார். ஆன்மீகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

சில காலம் மலை நாட்டுப் பகுதியில் கல்வி கற்பித்து விட்டு யாழில் பணியாற்றத் திரும்பிய போதும் இரு மாணவர்களை மலையகப் பகுதியிலிருந்து தன்னுடன் அழைத்து வந்து அவரது வீட்டில் தங்க வைத்து கல்வி கற்பித்தமை எனக்கு ஞாபகம் இருக்கிறது. இது இவரது கல்விப்பணிக்கு மேலாக மாணவர்கள் முன்னேற்றத்தில் அவர் கொண்ட அக்கறையினைச் சுட்டிநிற்கின்றது. இவர் பாடசாலையில் மட்டுமன்றித் தனது கிராமத்தில் உள்ள மாணவர்கள் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர். இவரை எந்த நேரத்திலும் அணுகி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு பயன்பெற்றவர்களில் நானும் ஒருவன். எனது கல்விக்காலத்திலும் சரி, சமூகப் பணிகளில் ஈடுபடுகின்ற காலத்திலும் சரி எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அவருடன் விவாதித்து ஒரு சிறந்த தூண்டலைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என்னைப் பொறுத்தவரை அவர் எனக்கு ஒரு நல்ல ஆசானாக, நண்பனாக இன்று வரை இருந்து வருகின்றார். நாம் எதிர்காலத்தில் எப்படி இருக்கப்போகின்றோம் என்பதற்கு தற்போது எதை சிந்திக்கின்றோம், யாருடன் பழகுகின்றோம் என்பவையும் முக்கியமானவை. அந்த வகையில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினை அதிஷ்டமாகவே கருதுகின்றேன்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, முன்னாள் அதிபர் திரு.ச.சிவநேஸ்வரன் காலத்தில் உன்னத வளர்ச்சியடைந்ததை எல்லோரும் அறிவர். திரு.ச. சிவநேஸ்வரன் அவர்கள் பாடசாலைக்கென தான் நிர்ணயித்த இலக்குகளைத் தவறாது அடைந்து கொள்ளும் பொருட்டு திரு.இ.ஆனந்தநடராசா அவர்களின் அர்ப்பணிப்பினையும் சுயநலமற்ற சேவையையும் சரியாக மதிப்பீடு செய்து அவரை உபஅதிபராக்கி தனக்கு உறுதுணையாக்கிக் கொண்டார்.



திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் தனது துணவியாருடன் ஓய்வுகாலத்தில் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

# ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின்
# வாழ்த்துச் செய்தி

அண்டிய அனைவருக்கும் அன்பைச் சொரிந்து ஆசானாய் நின்று அரவணைத்து வழிகாட்டி இன்சொல்லால் இதயங்களை ஈர்த்தெடுத்து ஈகையில் சோராது கொடுப்பதில் உவப்பெய்தி உடல்உள, ஆன்மீக வளர்ச்சிக்கு உரமூட்டி ஊக்கமுடன் ஓயாது உழைத்து நின்று எளியோர், வலியோர், ஏதிலிகள் யாவர்க்கும் கை கொடுத்து ஏணியாய் நின்று ஏற்றமுடன் ஞானப்பால் ஊட்டி ஐயம் தெளிய அறிவமுதினை ஆர அளித்த ஒற்றுமைப் பண்பையும், உயர் நெறி அனைத்தும் ஊன்றி விதைத்து, ஓங்கி வளர்ந்து உலகெங்கும் புகழ் மணம் பரப்பிட ஔடதமாய் நின்ற எம் பிரதி அதிபர் உருவத்தில் சிறியவராயினும், குணத்தில் பெரியவராய், 'தங்கச்சி பிள்ளை' என அன்பாக அழைத்து நகைச்சுவையாகப் பேசுவதில் நண்பனாய், அறிவுரை கூறுவதில் அன்பனாய், சந்தேகம் தீர்ப்பதில் தந்தையாய், சிறந்ததோர் வழிகாட்டியாக, ஆலோசகராக ஆரம்பப்பிரிவு ஆசிரியர் எம்மை வழிப்படுத்தும் எம் பிரதி அதிபர் எமக்குக் கிடைத்த வரம் என்றே கூறவேண்டும்.

ஆரம்பப்பிரிவு பிள்ளைகளின் வளர்ச்சிக்கு சாதகமாக, அதற்குத்தூண்டுகோலாக அமையத்தக்க சூழலை உருவாக்குவதும், சூழலுடன் தொடர்புகொண்டு அனுபவத்தைப் பெறுவதும், செயற்பாடுகளினூடாக சூழலுடன் தொடர்புற்று மகிழ்ச்சியையும், களிப்பையும் பெறுவது போன்ற வாய்ப்புக்களை விருத்தி செய்வதன் மூலம் ஒரு சிறந்த நற்பிரஜையை உருவாக்குவது ஆரம்பப் பிரிவு ஆசிரியரர்களான எமது கடமை என்பதை புரிய வைத்து எமக்கு என்றும் உறுதுணையாக, வழிகாட்டியாக எம்மை வழிநடாத்திய எம் பிரதி அதிபர் ஓய்வு பெறுவது எமக்கெல்லாம் பேரிழப்பாகும்.

'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்ற பொன்மொழிக்கிணங்க அன்று தொட்டு இன்றுவரை ஆயிரமாயிரம் மாணவச் செல்வங்களை வளர்த்தெடுத்த எம் பிரதி அதிபர் இறை நிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர். மாணவர்களை வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக அன்றி அவர்களின் பல்திறப்பட்ட ஆற்றல்களை ஆளுமையை விருத்தி செய்வதில் இவராற்றிய பங்கு அளப்பரியதாகும். மற்றவர்களுடன் இனிமையாகப் பேசும் இவரின் இயல்பு, அன்பான வார்த்தை,, நண்பர்களையும் நாடிவந்தோரையும் உபசரிக்கும் நற்பண்பு போற்றுதற்குரியது. எம் ஆசான் எம் பாடசாலையின் வளர்ச்சியில் மட்டுமல்லாது பாடசாலையில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவரின் நலனிலும் அக்கறை காட்டி வளர்ப்புத் தந்தையாக இருந்து அவர்கள் பாடசாலைக் கற்றலை முடித்த பின்பும் அவர்களின் நன்மை, தீமை, சுக துக்கங்களில் பங்கெடுத்து அவர்களின் குடும்பத்தில் தானும் ஒருவராக செயற்பட்டு எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்த அகல்விளக்கு. இவர் வளம் பல பெற்று சீரும் சிறப்புமாக ஓய்வு காலங்களில் நோய்நொடி இன்றி ஆனந்தமாய் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**

**ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள், யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**



**எம்.வேல்முருகன்**
(பழைய மாணவன்,
இ/றை தமிழ் வித்தியாலயம்)
அதிபர்,
ஹ/ பின்னோயா தமிழ் வித்தியாலயம், ஹட்டன்.

# தெற்கின் தீர்க்கதரிசி

சேர்,
இருண்டு போன ஒரு
சமுதாயத்தை
எழுப்புவதற்கு
அன்று
நீங்கள் செதுக்கிய
ஆயுதங்களில் நானும் ஒருவன்.

எனது வைர நெஞ்சத்தில்
உங்கள் ஞாபக வெளிச்சங்களை
எப்போதாவது ஏற்றிக்கொள்கிறேன்.

சேர்,
நீங்கள் அன்று கூறிய
''உங்கள் சமூகம் கல்வியால் மட்டுமே



மேன்மையுறும்''
என்ற மகுட வாக்கியத்தை
தூக்கிச் சுமந்து
நீங்கள் சொன்ன இடத்தில்
சேர்க்கும் பணியை விட
உங்களுக்கு இதுவரை நான்
ஒன்றும் செய்யவில்லை சேர்.

கரும்பலகை எழுத்துக்கள்
எங்கள் நெஞ்சத்தில்
கல்வெட்டுக்கள் சேர்.

நீங்கள்
சொன்ன பழமொழிகளும்
உதடு ஒட்டாத குறள்களும்
பாரதமும் ராமாயணமும்
எம்மைப் பண்பாளனாய்
பல படி மேலுயர்த்தின சேர்.

இலக்கணம் எமக்கு
வேப்பங்காய் தான்
உங்களால் தானே
வேப்பங்காயை
விரும்பி உண்ண
விருப்பமே வந்தது.

பலபேர் இன்று
எனக்கு
பட்டாடை போர்த்த
வருகின்றனர்
சிலபேர்
'மலையகத்தின்
சிந்தனைச் சிற்பி' என்கின்றனர்
எனக்குத் தானே தெரியும்
என்னைப் புடம் போட்ட
பொற்கொல்லன்
நீங்கள் என்று.



விழுதே அறியாத
ஆலமரமே,
சற்றுக் குனிந்து பார்
கூடைகளுக்குள் நீ
எழுப்பிய கோபுரங்களை!!

சேர்,
நீங்கள் இட்ட
வித்துக்களில் பல இன்று
விருட்சமாகி
எத்தனையோ சாதனைகளை
கச்சிதமாய் முடிக்கின்றன
உங்கள் தீர்க்கதரிசனம்
தெற்கில் சிறப்புற்றது.
வடக்கீன்ற வள்ளலே!
தெற்கின் திலகமே!!
உங்கள் சிறப்பை
இந்தச் சிறுதாளில்
எழுதுவதெப்படி...??

மாற்றம் நிரந்தரமானதென்றாய்
ஒருநாள் மாறுமென்றாய்
இன்று இங்கே
பலர் ஆசிரியர்
பலர் அதிபர்
பலர் வர்த்தகர்
நீங்கள் விட்டுச் சென்றதைத்
தொடர
தொட்ட வண்ணம் உள்ளனர்
உங்கள் அன்பு மழலைகள்.

எழுத்தறிவித்தவன்
இறைவன் என்றால்
நீங்கள் எம் இறைவனே.

வடநாட்டு மைந்தனுக்கு
எம் வந்தனங்கள்!!



G.J.**பிலிப்**
அதிபர், இ/பனான தமிழ் வித்தியாலயம்
இலுக்கும்பர, பலாங்கொடை
(1983 தொடக்கம் 1987 வரை இ/றை தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவன்)

# A.E. ஆனந்தநடராசா ஆசிரியர் அவர்கள் பலாங்கொடை மண்ணுக்கு ஆற்றிய சேவைகளின் சில துளிகள்

1983 இல் பலாங்கொடை மண்ணில், பயிற்றப்பட்ட சமூகவியல் ஆசானாக தனது தடங்களைப் பதித்த இவர் தனது கடமையின் ஆரம்ப நாள் முதலே ஒரு தனித்துவத்தினைப் பேணி வந்தார். இவர், பலாங்கொடை நகருக்கு வந்த போது பொதுவாக கல்வி நிலை மிகவும் மோசமான நிலையிலேயே காணப்பட்டது. உதாரணம், க.பொ.த (சா.த) பரீட்சைக்கு 40 மாணவர்கள் தோற்றினால் இதில் கணித பாடம் உட்பட க.பொ.த (உ.த) க்கு தகைமை பெறும் மாணவர்கள் வெறுமனே 5 பேர் அல்லது 6 பேர்கள் மட்டுமே தான். இந்த நிலையில் இவர் குறிப்பிட்ட வருடத்தில் பலாங்கொடை றை/ தமிழ் மகா வித்தியாலயத்திற்கு வருகை தரும் போது ஒரே ஒரு தகரக் கொட்டில் என்றே சொல்ல வேண்டும்.

முன்னர் இறப்பர் தொழிற்சாலையாக இருந்த இந்தக்கட்டடத்தில் தான், தரம் 6-11 வகுப்புக்கள் காணப்பட்டன. இவ்வகுப்புக்கள் அனைத்துக்கும் ஆசான் A.E. ஆனந்தநடராசா அவர்களே. தனது வகுப்பு நேரசூசிக்கு அப்பாற்சென்று சமயம், தமிழ், சமூகவியல், கணிதம் போன்ற பாடங்களை நேரம் காலம் பாராது கற்பித்தார்.

இதன் விளைவாக இவர் கற்பிக்க ஆரம்பித்த வருடத்தில் இருந்து தனது ஆசிரியர் சேவையில் றை/ தமிழ் மகா வித்தியாலயத்தை விட்டு இடம்மாற்றம் பெற்று யாழ்ப்பாணம் வரும் காலம் வரையில் க.பொ.த (சா.த) இல் வரலாற்றுச் சாதனைகளை படைத்தார். இவர் பெற்றுக் கொடுத்த பெறுபேறுகள் இன்று பெறப்படும் பெறுபேறுகளுடன் ஒப்பிடும்போது ஆச்சரியமானவையே!

இது மாத்திரமன்றி இவர் தனது ஆசிரியர் கடமையின் போது எம் மாணவர்களின் சமய, கலை, கலாசார விடயங்களிலும் மிகுந்த அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார். குறிப்பாக தமிழ்மொழித் தின போட்டியின் போது பேச்சு, நாடகம், நடனம், கட்டுரை எழுதுதல் போன்ற போட்டிகளுக்கும் மாணவர்களைத் தயார் செய்து வலய, மாகாண மட்டங்களில் முதல் இடங்களைப் பெறவும் செய்தவர்.

குறிப்பாக 1987ஆம் ஆண்டு மகாபொல கட்டுரைப் போட்டியில் மாணவன் ஒருவனை முதலிடம் பெறச் செய்து அம்மாணவனுக்கு அப்போதைய ஜனாதிபதி J.R ஜயவர்த்தனா அவர்களிடம் முதலிடத்திற்கான சான்றிதழையும் பெறச் செய்தார். அத்துடன் அதே ஆண்டில் இவரின் நெறியாள்கையின் கீழ் தமிழ்த்தினப் போட்டியில் அகில இலங்கை மட்டத்திலான நாடகப் போட்டியில் 4ஆம் இடத்தையும் பெறச் செய்தார். இப்போட்டிகள் கண்டி சில்வஸ்டர் கல்லூரியில் இடம் பெற்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவர் கற்பித்த க.பொ.த (சா.த) இல் சித்தி பெற்ற மாணவர்களில் இன்று அதிபர் தரம் 1இல் 5 அதிபர்களும், அதிபர் தரம் 2 இல் 4 அதிபர்களும், அதிபர் தரம் 3 இல் 5 அதிபர்களும், பதில் அதிபர்கள் 4 பேரும், P.H.I பதவியில் 4 பேரும், தனியார்துறைக் கம்பனியில் உயர் பதவியில் 7 பேரும், ஆசிரியர்களாக 15 பேருமாக மொத்தம் 54 பேருக்கும் மேற்பட்டவர்கள் அரசாங்க, தனியார் துறைகளில் உயர் பதவியில் இருக்கின்றார்கள். இவர்களில் சிலர் இன்று இந்தியாவில் தமிழ் நாட்டில் இறைவரி திணைக்களத்தில் உயர் பதவிகளிலும் இருக்கின்றார்கள்.

இப்படியாகத் தனது ஆசிரியர் கடமையினைத் திறம்படச் செய்து 1986ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்று சென்று கடந்த 27 வருடகால சேவையை யாழ் மண்ணில் பூர்த்தி செய்து தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்று மணிவிழாக் காணும் ஆசான் A.E .ஆனந்தநடராசாவின் மணிவிழாக் கொண்டாட்ட மலரிற்கு மலையக மக்களின், குறிப்பாக பலாங்கொடை மண்ணின் சார்பாக சில வரிகளை எழுத அடியேனுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கு மணிவிழா ஏற்பாட்டுக் குழுவிற்கு எம் மக்கள் சார்பாக மனம் உவந்து நன்றிகள் பல கூறி

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந் நன்றி கொன்ற மகற்கு"

என்ற குறள்மொழிக்கு இணங்க, ஆசான், மணிவிழா நாகயன் A.E. ஆனந்த நடராசா அவர்கள் எமது சமூகத்திற்கு ஆற்றிய உதவியை என்றும் மறவாத பலாங்கொடை மக்கள் சார்பாக மனமார வாழ்த்துகின்றேன்.





**செல்லையா சிவராஜ்**
(பழைய மாணவன், இ/றை தமிழ் வித்தியாலயம்)
உப அதிபர், இ/ பலாங்கொடை இந்துக் கல்லூரி,
பலாங்கொடை.

# தள்ளி நீயும் போகாதே....

வாழ்வு அர்த்தமுற
வேண்டுமென்றே
தாழ்வு கொண்டிருந்த
மலையகத்தில்
பாழ் நீக்கி பளீரிட செய்ய
யாழ்ப்பாணத்திலிருந்து வந்தாய்

கதியற்ற மாணவருக்கு
நிதி இன்றி மதி புகட்ட
பதித்தாய் நின் பாதங்களை
மதிபோல பலாங்கொடையில்

சொந்தங்களோ சுன்னாகத்தில்
பந்தங்களோ எம் பள்ளியில்
மந்தமுடன் சுழன்ற எம் கல்விக்கு
உந்து சக்தி நீ ஆனாய்

ஆனந்த நடனத்தை ஆடி எமை
ஆனந்தமாக்கியவனே எம்
ஆனந்தநடராசா உம் நினைவு
ஆனந்தமாக்குமையா எப்போதும்

மலையத்தில் எம்மவர்கள்
கலைத் திறமை காட்டிடவே
தொலைந்து நின்ற எம் திறனை
நிலை நிமிர்த்தி விட்டவனே



சரித்திரமும் சமயமும் எம்முள்ளே
தரித்திடாத கணிதத்தையும்
சரிந்திடாது நிலைத்திருக்க
எரிந்து நின்ற சுடர் விளக்கே

எட்டுத்திக்கும் எம் திறனை
எட்டச் செய்ய - விளையாட்டு
திட்டமதை விருப்புடனே - எம்முள்
நாட்டி விட்டுச் சென்றவனே

உன் பணியில் உயர்ந்தோர் - எம்மில்
எண்ணில் பல நூறு - அவர்கள்
மண்ணில் வாழமட்டும் இருப்பாய்
விண்ணில் விடி வெள்ளியாய்

கல்வியை வெறுத்த என்னை கனிவாய்
கரை சேர்க்க அழைத்தாய்
கரிசனையோடு கருணையாளனே
கரைந்திடுமா நின்நினைவுகள்

பள்ளிவாழ்வுக்கு விடை
கொடுத்தாலும்
துள்ளி வந்து எமக்கு உன் பணியை
அள்ளித் தர அழைக்கின்றோம்
எமை விட்டு
தள்ளி நீயும் போகாதே...!

# ஆசிரியருக்கு ஒரு வழிகாட்டி

ஆனந்தநடராசா ஆசிரியரின் சேவை நலன் பாராட்டு விழாவை முன்னிட்டு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அவருக்கு மணிவிழா மலர் ஒன்று வெளியிடவிருப்பதாக அறிந்தோம். ஆகவே, எமது உள்ளக்கிடக்கைகளை ஓரளவு வெளியிடலாம் என்ற எண்ணத்துடன் இதனை எழுதுகின்றோம். ஆனந்தநடராசா ஆசிரியர் எனும் போது எமக்கு பாரதியின் கவிதை தான் ஞாபகத்திற்கு வருகின்றது. பாரதியார் கண்ணனை 'கண்ணன் என் சேவகன்' என்ற பாடலில்

"நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்"

என்று பாடியுள்ளார். அப் பாடலை எண்ணும் போது கண் முன்னே நிற்பவர் ஆனந்தநடராசா ஆசிரியர் தான். இவர் கண்ணனிலும் ஒரு படி மேலே நின்று எல்லோருடனும் சகோதரனாக இருந்து எம்முடன் சேவையாற்றினார். அவர் எமது பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றிய போது எமக்கெல்லாம் அன்பான ஒரு சகோதரனாய் இருந்து ஏற்றவகையில் ஆலோசனைகள் கூறி நல்வழிப்படுத்தினார். இவருக்குக்கற்பித்ததிருமதிஜெ. கிருஸ்ணசாமி அவர்களே எமது பாடாசலையின் அதிபராக இருந்தார். அவ்வேளை எமது பாடசாலையில் சிறந்த ஒரு ஆசிரியர் குழாம் இருந்தது. எல்லோரும் ஒரு குடும்பம் போல சேர்ந்து சேவையாற்றினோம். எமக்கு என்ன பிரச்சினையானாலும் சரி துன்பங்களாயினும் சரி பாடசாலைக்குள் வந்ததும் எம்மை மறந்துவிடுவோம். ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறி மகிழ்வுடன் கற்பித்தற் செயலில் ஈடுபடுவோம்.



திரு. ஆனந்தநடராசா அவர்கள் தோளில் துணிப்பையை மாட்டிக் கொண்டு நகைச்சுவையாகக் கதைத்து எல்லோரையும் சிரிக்க வைப்பதுடன் மாணவர்களையும் உற்சாகப்படுத்தி கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவார். ஆசிரியர்கள் மாணவர்கள் ஒவ்வொருவரது சுக துக்கங்களிலும் பங்குபற்றி தானும் அவர்களுள் ஒருவராய் நிற்பார்.

விளையாட்டுப் போட்டி என்றால் எமது பாடசாலை முற்றத்து மாமரத்தின் கீழே இருந்து போட்டிக்கான ஆயத்தங்கள் எல்லாம் செய்து கொண்டிருப்பார். அக்காட்சி இப்போது எமது கண்முன்னே நிழலாடுகின்றது. மதிய உணவு விநியோகத்திற்காக மரக்கறிகளை சந்தைகளில் வாங்கி தனது மோட்டார் சைக்கிளில் கட்டிக்கொண்டு வரும் காட்சியே திரு. ஆனந்தநடராசாவை முதன்முதலில் காலையில் காணும் காட்சி. திருமதி. ஜெ. கிருஸ்ணசாமி அவர்களின் மாணவனாக இருந்ததால் அவரது செல்லமான கண்டிப்பிற்கும் ஆளாவதுண்டு. அதனால் தான் இன்று இவருக்கு இவ்வளவு மகத்தான மணிவிழா நடைபெறுகின்றது.

மாணவர்கள் ஒவ்வொருவர் மீதும் மிகுந்த கரிசனை காட்டுவார். அவர்களை தனிப்பட்ட முறையில் அழைத்து அவர்களின் நிலையறிந்து அவர்களுக்கேற்ப கற்பிப்பதில் வல்லவர். காலையென்ன மாலையென்ன எந்த வேளையிலும் மாணவர்களுக்கு வகுப்பெடுப்பது, அவர்கள் படிக்காவிட்டால் மிகவும் வேதனைப்படுவது. அதேவேளை அவர்கள் படிப்பில் அக்கறை கொண்டால் மிகவும் மகிழ்ந்து பெருமை கொள்வது இதுவே அவரின் செயற்பாடு.

இவரின் பெயர் கூட இவருக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. என்ன துன்பம் வந்தாலும் எல்லாவற்றையும் மறந்து ஆனந்தமாய் இயங்குவது தன்னைச் சூழ உள்ளவர்களையும் மகிழ்வாக இருக்கச் செய்வது. பொதுவில் ஆனந்தநடராசா ஆசிரியர் என்றால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இவர்களுக்கு ஒருவித அன்பு கலந்த பயபக்தி, தங்களுக்குள் ஒருவராக எல்லோரையும் அவர் நேசிப்பார்.

தமிழ்ப் பாடத்தைப் பொறுத்த வரை இக்கால அகத்தியர் என்றும் சொல்லலாம். இலக்கியப் பாடல்கள் எல்லாம் இவருக்கு அத்துப்படி, எதைக் கேட்டாலும் தெளிவாக விளக்கம் கூறுவார். பட்டப்படிப்பு பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்றதால், பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதாக ஒரு ஞாபகம். இப்போது கூட எனக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் உடனே ஆனந்தன் மாஸ்ரருக்கு அழைப்பை ஏற்படுத்தி சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வேன். எந்நேரமாயினும் அலுக்காமல் சலிக்காமல் விளக்கமான பதில் வரும். எனக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் ஏதாவது பாடரீதியான சந்தேகங்கள் வந்தாலும் உடனே ஆனந்தன் மாஸ்ரரிடம் விளக்கம் பெறுவோம்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் போது பொருத்தமான சூழல் இருக்க வேண்டும் அவ்வாறான சூழல் இருந்ததால் தான் அக்காலங்களில் சிந்மய பாரதி யாழ் மாவட்டத்தில் மட்டுமன்றி தேசிய ரீதியிலும் சிறப்புற்று விளங்கியது. இன்று திரு. இ. ஆனந்தநடராசா அவர்களுக்கு யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியினர் மணிவிழா மலர் வெளியிடுவதனை எண்ணி மிகவும் மனம் மகிழ்கின்றோம். இப்படியான பொறுப்புள்ள திறமையான ஆசிரியரால் பாடசாலைக்கே பெருமை ஆகும். இவரது ஓய்வு காலம் சிற்புற எமது பழைய ஆசிரியர் குழாம் சார்பில் வாழ்த்துகின்றோம்.

**திருமதி. உ. மணிவண்ணன்**
**செல்வி க. தர்மசோதி**

(ஆசிரியர் - யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்)



**வ. முருகதாஸ்**
அதிபர்
மட்/செல்வாநகர் சிவா வித்தியாலயம்
ஆரையம்பதி மட்டக்களப்பு


# ஆனந்த நாட்கள்

அகவை அறுபதை எட்டியுள்ள எங்கள் 'ஆனந்தர்' சேருடன் ஆனந்தமாய்க் கழித்த நாட்களை மீட்டிப் பார்க்கக் கிடைத்த வாய்ப்பால் பேருவகை கொள்கின்றேன். சண்டிலிப்பாய் இந்து சாதனைச் சிரகங்களை எட்டுவதற்காக உழைத்த பல்துறை ஆளுமைகளில் 'ஆனந்தநடராசா' என்னும் நாமம் என்றும் முதன்மையானது.

எனது ஆசிரியப் பயணத்தில் நண்பராக, ஆசானாக, தந்தையாக பல பரிமாணங்களில் ஊன்றுகோலாக இருந்தவர் எங்கள் 'ஆனந்தர்' சேர். கனவிலும் நனவிலும் ஒவ்வொரு மணித்துளியையும் மாணவர்களின் வளர்ச்சிக்காகச் செலவிட்ட இவ் அரும் பணியாளர் ஆசிரியத்துவத்திற்கே ஒரு கலங்கரை விளக்கு என்றால் அது மிகையல்ல. 'கல்வி பெற்றுய்வதற்கு வறுமை ஒரு தடையல்ல' என்பதைப் பல வறிய மாணவர்களின் உயர்ச்சி மூலம் நிரூபித்து புளகாங்கிதம் கண்டவர்.

சண்டிலிப்பாய் இந்துவில் சேருடன் பணியாற்றிய காலம் என்றும் பசுமையான, சுவாரஸ்யமான பொற்காலம் தான்! அக்காலம் மீண்டும் வராதோ என ஏங்கும் சகபாடி ஆசிரியர்களில் நானும் ஒருவன். இறுக்கமான வேலைப் பழுக்களிடையே இளைப்பாற நாம் ஒரு உபாயம் வைத்திருந்தோம். அது வேறொன்றுமில்லை. எங்கள் ஆனந்தர் சேரின் வாயைக் கிளறிவிடுவதுதான்! அவரது போலிக் கண்டிப்புடனான பழமொழிகள் கலந்த தமிழ்ச் சொற்பொழிவால் எம் களைப்பெல்லாம் காணாமற் போய்விடும்!. பாடசாலையை ஒரு குடும்பமாகக் கருதியவர். ஒவ்வொருவரது இன்ப துன்பத்திலும் முதலாவதாய் நிற்கும் மனிதர் என்றால் சேர் தான். அவரின் ஆத்மார்த்தமான ஆசீர்வாதங்களும், ஆறுதல் வார்த்தைகளும் வைரத்திலும் வலிமையானவை என்பதைப் பட்டுணர்ந்துள்ளேன். மாணவர்களின் குறும்புகளை அடக்க ஆளைவிடப் பெரிய பிரம்புடன் குடு குடுவென ஆனந்தர் சேர் கோபமாய் நடப்பதே ஒரு தனியழகு (ஆனந்த/ர் நடை) தான். தவறுகளைச் சுட்டுவதில் அவருக்கு ஆசிரியரோ மாணவரோ வேறுபாடில்லை. இப்படியே சேரின் தனித்துவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்!

தொலைவில் நான் வசித்து வந்தாலும் அவருடன் இன்றுவரை நெருக்கமாய்ப் பழகி வரும் நிலையில் அவரது ஓய்வு பாடசாலைச் சமூகத்திற்கும் எனக்கும் ஜீரணிக்க முடியாததாகவேயுள்ளது. இருந்தபோதிலும் அவரது ஓய்வுக் காலம் அமைதியான, ஆரோக்கியமான, மகிழ்வான காலமாக விளங்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**திரு. ந. குகபரன்**
ஆசிரியர்.
கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்

# கல்வியுலகில் ஓர் ஆனந்தம்

ஈழத்தமிழரின் பெருங்கற்காலப் பண்பாடுப் பாரம்பரியம் மிக்க கந்தரோடையில் மருதம் விரிந்த தண்மிகு சின்னக்குளத்தடியில் தான் இந்த ஈரமான இதயம் கொண்ட ஆனந்தநடராசா பிறந்தார். கிராமிய மணம் கமழும் அன்னை மடியில் வளர்ந்து தன் உள்ளத்தால் அனைவரது உள்ளங்களிலும் உறைந்து வயதால் அகவை அறுபதை அடைந்துள்ள திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களோடு நான் கொண்டுள்ள உறவு எப்பொழுதும் மகிழ்வானது. இன்று அவர் குறித்துப் புலரும் மணிவிழா மலரில் எனது உணர்வுகளையும் பதியக் கிடைத்தமை பெரு மகிழ்வைத் தருகின்றது.

"தமக்கென முயலா நோன்றாட்

பிறர்க்னெ முயலுந ருண்மை யானே"

இவ் உலகம் இன்றும் இருப்பதாக இளம்பெருவழுதி புறநானூற்றில் பாடியுள்ளார். மற்றையவரின் உயர்வுக்காய் உழைக்கும் திரு.இ.ஆனந்தநடராசா அவர்கள் எட்டு வயதில் தனது தந்தையை இழந்த போதும் அன்னை அரவணைப்பில் நிமிர்ந்தார். இன்று அகவை தொண்ணூறைத் தாண்டி இனிதே வாழும் தன் தாயுடனும் உடன்பிறப்புக்களுடனும் 'குமாரி' என வாஞ்சனையோடு தான் அழைக்கும் அவர் துணை வசந்தகுமாரியுடனும், சமூகத்தவரோடும் உண்மையான அன்பு பூண்டுள்ளமையே இவரின் உயர்விற்கு அடித்தளமெனலாம்.


தனது ஆரம்பக்கல்வியை கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தில் தொடங்கிய ஆனந்தநடராசா அவர்கள் இடைநிலைக்கல்வியை யாழ்/ ஸ்கந்தவரரோதயாக் கல்லூரியில் தொடர்ந்தார். வீட்டில் வறுமை நெருக்கியபோது தொடர்ந்து உயர்கல்வியைக் கற்கும் மனநிலை இன்றி இருந்த வேளை திருமதி சந்திரா யோகேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்கல்வியைத் தொடருமாறு வழிகாட்டியமையே தனது கல்வி வளர்ச்சிக்கு வழிகோலியது எனப் பல தடவை நினைவு கூருவார்.

இரத்தினபுரி றை/தமிழ் வித்தியாலயத்தில் தனது ஆசிரியப்பணியைத் தொடங்கிய ஆனந்தநடராசா அவர்கள் கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் சமூகக்கல்விப் பாடத்தில் பயிற்சி பெற்றார். தனது B.A பட்டப்படிப்பில் தமிழ் பொருளியல், புவியியல் ஆகிய பாடங்களைக்கற்ற இவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா அவர்களின் அன்புக்குரிய மாணவனாகவும் மிளிர்ந்தார். தமிழில் M.A பட்டத்தை 2009 இல் பெற்றமை இவரது மொழிப்பற்றுக்குச் சான்றாகும்.

ஆனந்தன் சேர் என எல்லோராலும் அழைக்கப்படும் இவர் சிறந்த கடமை வீரர். இவரது பெயர் சுட்டும் பிற்பாதி பொருளுக்கேற்ப நாடகம் நடனம் ஆகிய கலைகளிலும் வல்லமை பெற்றிருந்தார் கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் மறைந்த வீரமணி ஐயர் அவர்களிடமும் வேலானந்தன் அவர்களிடமும் நடனம் பயின்று அரங்க அளிக்கையில் தனது முத்திரையினைப் பதித்தார். இவரது நடையிலும் உரையாடலிலும் நளினம் தவழும். நடித்துக்காட்டத் தெரிந்த இவருக்கு வாழ்க்கையில் போலியாக நடிக்கத் தெரியாது. கள்ளமிலா வெள்ளை உள்ளம் இவருடையது.

இ/றை தமிழ் வித்தியாலயம், யாழ். சிந்மயபாரதி வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியப் பணி புரிந்த போதும் யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியே இவரது சேவைக் காலத்தில் நீண்டது. ஆசிரியராக, உபஅதிபராக, பிரதி அதிபராக, கல்லூரிக்கு அழகு சேர்த்து உரமூட்டிய இவர் கல்லூரியின் முன்னைநாள் அதிபர்களான உயர் திரு. ச. சிவநேஸ்வரன், உயர் திரு. வ. ஸ்ரீகாந்தன் ஆகியோரது சேவைக்காலங்களில் அவர்களது திட்டங்களுக்கு உருக்கொடுப்திலும், செயற்படுத்துவதிலும் தன்னாலான பங்களிப்பினை நல்கினார். தற்போதைய அதிபர் திரு. கு. விமலன் அவர்களுக்கு அருந்துணையாக நின்றார். விளம்பர உலகில் வித்தியாசமானவராகத் திகழும் ஆனந்தநடராசா அவர்கள் எப்போதும் கல்லூரியோடு கலந்திருப்பார்.

வெள்ளை உள்ளம், மற்றவர்களுக்கு தோள் கொடுக்கும் நேயம், உரிமையோடு பழகும் பாங்கு, குறு குறு நடந்து எப்பொழுதும் மாணவர் தம் உயர்விற்கு வழிதேடும் அவா, என அத்துணை உயர்பண்புகளுக்கும் சொந்தக்காரனான ஆனந்த நடராசா அவர்கள் கற்பித்தலிலும் தனித்துவம் மிக்கவர். மாணவரின் மனதைக் கவரும் அழகு மொழியிலும், இசையோடும் பொருளுக்கேற்ப நளினத்தோடும் அவர் கற்பிக்கும் சிறப்பினை மாணவர்கள் எப்பொழுதும் விரும்பி நிற்பர். தமிழ், சமூகக்கல்வி, புவியியல், சமயம் முதலான பாடங்களில் இவருக்கு இருக்கும் ஆளுமை முன்னுதாரணமான ஆசிரியராக இவரை மிளிர வைத்தது.



சக ஆசிரியர்களின் உளநிலையை எளிதில் புரிந்து கொண்டு அவர் தம் நலன்களை பேணுவதில் கரிசனையுடைய ஆனந்த நடராசா அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியான வகையில் பணியாற்றுவதற்கான புறநிலையை ஏற்படுத்துவதில் அக்கறையுடன் இயங்குவார். மாணவர்களை செம்மையான வழியில் வழிப்படுத்தும் திறன் பெற்ற இவர், மாணவர் தம் பெற்றோருடனும் நெருக்கமான தொடர்பு கொண்டவர். பிள்ளைகளின் குடும்பச் சூழலை அறிந்து பொருளாதார நெருக்கடியில் வாழும் பிள்ளைகள் பலருக்கு அவர் தம் வாழ்வில் ஒளியேற்றி வைத்த பெருமை இவரைச்சாரும். இவரின் உதவியால் உயர்ந்த பலர் இன்று தம் வாழ்வின் திசைகளில் சிறந்து நிற்கின்றனர். நல்ல முயற்சிகளை உற்சாகப்படுத்தல் திறமையுள்ளவருக்கு முன்னுரிமை வழங்கல். மற்றவரின் மகிழ்வில் தான் மகிழ்தல் என்பதே இந்த வழிகாட்டியின் உயர்மாண்பு.

தான் வாழும் சமூகத்தோடும் உறவுப் பிணைப்பை கொண்டிருக்கும் ஆனந்தநடராசா அவர்கள் கந்தரோடையில் கலைமதி வாசிகசாலை உருவாக்கத்திலும், வீரகத்தி விநாயகர் ஆலயத்திருப்பணிகளிலும் தன்னை இணைத்துச் செயற்பட்டவர்.

ஈழத்தமிழர்களின் கையறு நிலை குறித்தும் சமூகத்தில் பெருகும் ஒழுக்க பிறழ்வுகள் பற்றியும், போலி மனிதர்களது சந்தர்ப்பவாத செயற்பாடுகளை நோக்கியும் ஆழ்ந்த கவலை அவர் உள்ளத்தில் நிறைந்திருப்பதை அவருடனான உரையாடல்களின் போது உணர முடியும் உணர்வு பூர்வமாகவும், அறிவு நிலைப்பட்டதாகவும் அமையும் அவரது கருத்துக்கள் தூர நோக்குடையவை.

அன்பான ஆனந்தன் சேர் அவர்களே, வாழ்க்கையில் நாம் நிறைய மனிதர்களைச் சந்திக்கின்றோம். ஆனால் அவர்களில் சிலரே எமது உள்ளத்தில் ஆழப்பதிந்து விடுகின்றனர். அத்தகைய பெருமக்களில் நீங்களும் ஒருவர். வாழ்க்கையின் வெளி நீண்டது. அதில் நீங்கள் சாதிப்பதற்கு இன்னும் நிறையவே உள்ளன, வலுவற்றவர்களுக்கு தோள் கொடுக்கும் வல்லமையாக, சாதிக்க வைக்கும் தூண்டியாக, சமுதாயத்தின் இனிய திசை காட்டியாக, யாவற்றுக்கும் மேலாக நல்ல மனிதராக திகழும் நீங்கள் வாழ்க்கையில் உங்கள் இனிய துணையோடு இன்று போல் என்றும் இனிது வாழ இறைவனை வேண்டுகின்றேன்.





**Mrs.F.R.J.Jeyanthan**
*Teacher*
*J/Sandillipay Hindu College*

# Acknowledgement to "Ananthan"

Our School had a deputy principal
Who ever has disciplinary principles
We call that person as "Aananthan Sir"
Whatever he does is an adventure.

Though he is small in appearance
He has amiable significance
School was alive and accurate
Whenever he rounds it with acquirance

We are sad to say that
He has actually left us but
We are still with amazement
How he could accustom to amicable

It's a historical event that
We sadly bade adieu to him
We wish him to be healthy
Which leads his life wealthy





**திருமதி.செ.ரகுதாஸ்**
ஆசிரியர்
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# ஆனந்த ஜோதி

மணி விழாக் காணும்
ஞான தீபமாம்!
எங்கள் ஆசான்
ஆனந்தநடராசா!

இரு தசாப்த கல்லூரி
வரலாற்றுப் பாதையில்
ஆனந்தமாய் எங்களுக்கு
அவர்கள் விட்டுச் சென்ற
சுவடுகள் தாம் எத்தனை

கல்வி கற்க வழியின்றி
வறுமையின் சுமையால்
கல்லூரி வாசலிற்கு
ஏங்கி ஏங்கி வந்த மாணவரை
எல்லாம்
அன்பாய் ஆதரவாய்
அரவணைத்து
ஏணிப்படியாய் தான் மிளிர்ந்து
ஏற்றம் பெற வைத்தார்

எமது ஆனந்த ஜோதியாய்
விளங்கும்
நடராஜப் பெருந்தகை

உமது சேவைகள்
சொல்லி அடங்காது
மாணவருக்காய்
உமது வாழ்க்கையை
அர்ப்பணித்தீர்
உமது சிறு கோலால் அல்ல
உமது சிறு உருவத்தால்
அல்ல

உமது சிறப்பான
வார்த்தைகளால்
உமது சிறந்த அறிவால்
உமது அறிவாலயத்தை
அடக்கி ஆண்டீர் அல்ல
அரவணைத்து ஏற்றிவைத்தீர்
ஆனந்த ஜோதியாய்
ஏற்றி வைத்தீர்

சிரித்த முகம் உரத்த குரல்
நேரிய பார்வை சொல்லில்
உறுதி
கடமையில் நேர்மை

ஒழுக்கத்தின் உயர்வு
உயர்ந்த இலட்சியம்
மாணவரின் நலனோம்பு
கல்லூரியின் வளர்ச்சி
அனைவரிடமும் அன்பு தயவு
தாட்சண்யம்
அத்தனையின் முழு வடிவம்
ஆனந்தமான தோற்றம்
அதுதான் ஆனந்தநடை

ஆனந்தநடராசாவின்
நடைமுறை

மணிவிழாக் காணும்
சிறப்பான இப்பொன்
வேளையில்
தொடர்ந்தும் உம் சேவைகள்
எமது கல்லூரி அன்னைக்கு
கிடைக்க
தங்கள் வாழ்வில் நோய் நொடி
இன்றி
சகல சௌபாக்கியங்கள்
பெறவும்
இதயத்தால் வாழ்த்துகின்றேன்
இறைவனைப் பணிந்து
வாழ்க வளமுடன்





**Mrs.Shianee Rameshkumar**
*Teacher*
*J/ Sandilipay Hindu college.*

# JUST ONE MINUTE ABOUT ANANDAN SIR

He is our Deputy Principal for so long
And also Tamil specialist.
He is kind hearted
And a good guider for the students.
In the past teachers taught Tamil with a chalk

But he teaches Tamil with a smile.
He provided with chances to talk
In our duty to do well
He is 'a mile stone'.
Discipline is his motto
And kindness is his litto.

He makes us laugh that ends up in a cough.
Words spring from his mouth
And brings out the truth.
We affectionately refer to him as
"The honourable Hero"

He imparts knowledge to shine bright.
He has a sharp memory
Which brings him glory
His voice is loud and vigorious
Choice of words is humourous.
Even a minute he doesn't waste and
Gives the proverb language taste to the students
He is very sincere to the school.
Devotion to duty is his beauty.
He provided ample academies for many pupils
To attain their future achievements.
Maruthanarmadam is from where he comes
The peninsula is proud of him.
We wish on behalf of our staff
"May God Bless You Sir for your
bright future".



**திருமதி. கௌ.காந்தரூபன்**
ஆசிரியர்
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# நிழற் பிரதி தாராயோ...

கல்வியே தன் கண்ணெனவும்
கடமையை தன் கருத்தெனவும்
கலைமகளை விலைபேசா
தலைமகனே விடைபெறுக
சிவந்த விழி நீர் உமிழ கனத்த மனம்
கடிவாளமிட்டு
நிலைமறந்து சிரிக்கின்றோம்
போலிகளாய்...
ஒப்பற்று சிறக்கட்டும் உம்
ஓய்வுக் காலம்
நீர் நிகரற்ற அம்பாளின் அருள் பெறுக.

கல்லூரி மைந்தரெல்லாம் இரண்டு
மணிக்கு போவார்கள்
கல்வி சாரா ஊழியரும் அதன் பின்னே
சென்றிடுவர்
இருட்டோட இருட்டாதான் அதிபருடன்
வீடு போய் சேர்வாராம் - சந்தேகம்
ஆனந்தன் சேருக்கு பேய்களுக்குப் பயமில்லையாம்
விருதுகள் மட்டும் சொல்லுமோ இவ்
வித்தக ஆசான் கிருபையை
இன்று வரை சண்டிலிப்பாய் மண்ணில்
இவர் சிந்திய வியர்வை
நூற்றாண்டு கடந்து செல்லுமாம்
பிரதி அதிபர் உயர்வை
ஆசிரியர் மரபுக்கு இலக்கணம் தொழில்
தர்மத்தின் இலக்கியம்
நன்மை தீமை பகுபதம் மாணாக்கர்
என்றும் பகாப்பதம்
உற்ற உதவி தரும் உரிச்சொல்
உறவை இணைக்கும் இடைச்சொல்
அடடா இவரிடம் தோற்றுப்
போகின்றனர் முகநூல் நண்பர்கள்

சேவை ஓய்வதனால் அதில்
வெற்றிடமும் வைத்தாய்
புதிய கதை தொடக்க அவ்
வெற்றிடத்தை நிரப்ப
நின் உயிருள்ள நிழற்பிரதி தாராயோ?



**கு. சுபாஜினி**
(பழைய மாணவி )
ஆசிரியை - யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# தோளில் சுமந்த என் தந்தை

தாரமும், குருவும் தலைவிதிப்படி என்பது போல எனக்குக் கிடைத்த ஆசான் என் வாழ்வில் சாதனைகள் படைக்க குன்றின் விளக்குப் போல சுடர் விடும் தீபமாக இருந்து எனக்கு வழிகாட்டியவர். பேராசான் திரு. ஆனந்தநடராசா அவர்களை யா/சிந்மய பாரதி பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்கும் போது முதலில் நான் கண்ட அனுபவங் கள் பல உள்ளன. நான் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் வரும் போது என்னை ஒரு மாணவியாகக் கருதாது தன் செல்ல மகளாகக் கருதி தன் தோள் மீது தூக்கி தன் மகிழ்வை வெளிப்படுத்தினார். சில நாட்களில் விளையாட்டுப் போட்டிகள் காரணமாக நேரம் சென்று விட்டால் பத்திரமாக வீட்டிற்குச் கூட்டிச் சென்று விடுவார். அதனாலே அவரை ஒரு வகையில் என் உறவினராகக் கண்டு மகிழ்ந்தேன்.



பின்னர் யா/வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் தனியார் கல்வி நிலையத்தில் ஆசிரியரிடத்தில் சமூகக் கல்விப் பாடத்தினைக் கற்றிருந்தேன். அவர் இப் பாடத்தினை நகைச்சுவையுடனும் அபிநயத்துடனும் சொல்லித் தருவார். அதனால் நேரம் போவதே தெரிவதில்லை. நான் சிறு வயதில் உறவினராக நினைத்தது போலவே ஆசிரியரின் திருமணத்தில் பங்கு கொள்ளும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது.

சில வருடங்களின் பின்னர் ஆசிரியருடன் கூடவே கடமையாற்றும் பேறும் எனக்குக் கிடைத்தமையால் நான் எதிர்பாராத இன்ப அதிர்ச்சியைப் பெற்றேன். பாடசாலையில் என்னை வரவேற்றுச் சிரித்த உங்கள் முகம் இன்றும் என் ஞாபகத்தில் உள்ளது. எல்லோரும் சொன்னது போல் ஆசிரியர் கற்பித்த மாணவர்களை மறக்காது எல்லோரையும் பற்றி என்னிடத்தில் விசாரிப்பார். உங்கள் ஞாபகசக்தியைப் பார்த்து நான் வியந்த கணங்கள் பல. என்னையும் எனது சகோதரர்களையும் எனது பிள்ளைகளென்று எல்லோரிடத்திலும் அறிமுகப்படுத்தி வைப்பதில் எனக்கு ஆழ்ந்த உவகையைக் கொடுப்பதோடு அவர் மீது வார்த்தைகளினால் வடிக்கமுடியாத பற்றினையும் பாசத்தினையும் ஏற்படுத்துகின்றது. இதை ஒரு வகையில் குருபக்தி என்றே சொல்லலாம். ஆசிரியரிடம் கற்று ஆசிரியருடனே பணியாற்றும் பாக்கியம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. அத்துடன் பிரியாவிடைக் கணத்திலும் அவருடன் கூட இருப்பதை நினைத்து பெருமிதம் அடைகின்றேன்.

நான் பாடசாலைக்கு மன இறுக்கத்துடன் வரும் போதெல்லாம் அன்றலர்ந்த செந்தாமரை போல என்னை வரவேற்று அவர் பேசும் இனிய வார்த்தைகளால் வெயிலோனைக் கண்டு விலகும் பனி போலே என் மனக்கவலையகன்று அன்றைய நாள் மகிழ்வுடன் நிறைவானதாக அமைந்துவிடும். சிந்மய பாரதி தனில் மகளாகத் தோளில் சுமந்தது போல் இன்றும் ஓர் தந்தையாக இருந்து ஆலோசனை கூறுவதுடன் எனது பாதுகாப்பிலும் அக்கறையுடையவராக இருக்கும் அவரின் செயலைப் பார்த்து நான் பெருமிதம் அடைகின்றேன். தனது மாணவர்களை Facebook மூலமாக புகைப்படத்தினூடு பார்த்த போதும் அவர்களுடைய உணர்வுகளை அறிந்து அவர்கள் கவலையுடன் இருக்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொண்டு விசாரிப்பதோடு மட்டுமல்லாது அவர்களுக்காக மனம் வருந்தும் அவரின் மனதைப் பாராட்டி வியக்கின்றேன்.

சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் எங்கள் தந்தை மகள் உறவு என்றும் நினைவில் நிலைத்திருக்க இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.





**செல்வி கி. விஜிதா**
ஆசிரியர்
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# மாறாத தடங்கள்...


கல்வியெனும் கடலாம் இப்பள்ளியில்
கலங்கரை விளக்காய் மிளிர்ந்து
ராஜநடையுடனே மாணவர் ஒழுக்கத்தை
நவீனமாய் நகர்த்திச் செல்லும்
நந்தவனமாய் பரிணமித்து

தவறுகள் எதுவென்று திடமாக
இனங்கண்டு சீரமைக்கும்
சிகரமாய் விளங்கியவர்
கனி மொழிகள் பல பேசி
நேர் வழியில் செல்வதற்கு
வல்லதோர் வல்லமையாய்
சாதிக்கும் திறமைக்காரர் இவர்

கற்பித்தலே கடமையென்றெண்ணாது
தேவைகள் எதுவென்று
உணர்ந்தளித்த வள்ளலே
எத்தனை பேருக்கு வரும் ஐயா
இத்தனை தியாகம்?

சட்டென்று கதைத்தாலும்
சடுதியிலே இளகிடுவார்
சங்கடங்கள் வந்தவர்க்கு
தீர்ப்புக் கூறும் நீதிபதியாம் - இவர்

பௌர்ணமியின் பிரகாசம் சில நாளில்
உங்கள் புகழ் என்றும் ஒளி வீசும்
நீங்கள் பதித்துச் சென்ற தடத்தைப்
பார்த்து நாமும் வழி நடப்போம்.



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



**என். தனுசுஜன்** B.A.
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய்.
thanusuyan@gmail.com
+94 772030690

# மேற்கை விரும்பாத நாட்கள்


ஒவ்வொரு கிளையாக ஏறி உச்சிக் கொப்பைத் தொடுவதோடு இலக்கு முடிந்து விடலாம். ஆனால் வெற்றியைத் தொடுவதோடு முடிவதல்ல வாழ்வின் வசந்தம். இலக்கை அடையும் ஓர் இலட்சியப் பயணத்திற்கு வேராக இருப்பவரை நெஞ்சத்தில் வேர் கொள்ளச் செய்வதே நன்றியுடைமையாகும். இன்றிலிருந்து 19 வருடங்களை பின் நோக்கிப் பார்க்கிறேன். என் இதய வன்தட்டில் அத்தனை நினைவுக் கோப்புக்களும் அழியாமல் இருக்கின்றன. அது 1995 வைகாசி மாதம். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்த நான் அப்போது சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் அன்றைய அதிபர் திரு. ச. சிவநேஸ்வரனின் சிந்தையில் முதன் முதலாக உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிப்பதாக அறிந்தேன். என் விதியின் சக்கரம் சரியான வீதிக்கு திருப்பப்பட்டுவிட்டது. சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் இணைந்து கொள்கின்றேன். அப்போது அறிமுகமான ஆசிரியர்களில் ஒருவரே திருமிகு ஆனந்தநடராசா ஆசிரியர் அவர்கள். உயர்தர வகுப்பு என்பது அது தான் அவருக்கு முதல் வாய்ப்பு. அதன் முதல் அணி மாணவர்களில் நானும் ஒருவன். அந்த ஆண்டில் தான் புதிய பாடத்திட்டமும் அறிமுகமானது என்பதால் சவால்களோடு சாதனை செய்ய வேண்டிய தேவை அவருக்கும் எமக்கும் இருந்தது. எங்களுக்கு தமிழ்ப் பாடம் கற்பித்தார். முட்களில் நடந்து சென்று பூக்களைப் பறிக்கும் தந்திரங்கள் சொல்லிக் கொடுத்தார்.

கந்தரோடையின் சின்னக் குளம் என்ற இடத்திலிருந்து மிதிவண்டியில் தான் தினசரி வருவார். தமிழ் இலக்கணமும் இலக்கியமும் சுவைபடச் சொல்லிக் கொடுப்பார். அந்தக் காட்சிகள் இப்போதும் என் கண்களில் நிறைந்திருக்கின்றன. நாட்டின் அன்றைய சூழ்நிலை மோசமானதால் ஒரு சின்ன இடப்பெயர்வு, பின் மீண்டும் இணைகிறோம். இடப்பெயர்வுக்கு முன்னர் இருபத்தாறாக இருந்த மாணவர் எண்ணிக்கை பின்னர் ஏழாகக் குறைந்துவிட்டது. இந்நிலையில் ஆனந்தன் சேர் எங்கள் வகுப்பாசிரியராகின்றார். என் தாய்மொழி தமிழை எனக்குள் முழுவதுமாக அள்ளி நிறைத்த பெருந்தகைக்கு நன்றி சொல்லி மதிப்பளிக்கும் எழுத்துக்களாக இவற்றை எண்ணுகின்றேன். இதை, இந்த விழுதை எழுதும் நிலைக்கு ஆளாக்கிய ஆணிவேருக்கு காணிக்கையாக்குவதில் ஆனந்தமடைகின்றேன்.

இன்றைய சூழலில் நீங்கள் நம்பாவிட்டாலும் ஓர் உண்மை சொல்கிறேன். கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்களுக்கு நான் தனியார் கல்வி நிலையங்களுக்கு எங்கும் சென்றதில்லை. தனியே ஆனந்தன் சேருடைய கற்பித்தலை மட்டும் நம்பியிருந்தேன். இந்தக் குயில் காகத்தின் கூட்டில் வளரவில்லை. நீங்கள் சொல்லிக் கொடுத்த தமிழ்ப் பாடத்தின் நிறைவு எனது பல்கலைக்கழக அனுமதிக்கு போதுமானதாக இருந்தது. வகுப்பறை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அவரைக் காணும் போது சினிமாப் பாடல்களுக்குப் பொருள் கேட்பேன். கவிதைகள் எழுதுவேன். அவரிடம் காண்பிப்பேன். திருத்தமிருப்பின் திருத்தம் செய்வார். சரியாயின் தோள் தட்டிக் கொடுப்பார்.

முதலாவது உயர்தர மாணவர் மன்றத்தின் முதலாவது தலைவராக நான் நியமிக்கப்பட்ட வேளை, தோழமைக் கல்லூரிகளுடன் நம் நட்பை அகலப்படுத்திக் கொள்ளும் ஒன்றுகூடல் நிகழ்வைச் சுட்டும் விழாவுக்கு, கவிச்சுவையோடு ஒரு பெயரிடும் பொறுப்பை சேர் எனக்குத் தருகிறார். 'மகிழ்ந்து குலாவலும் மதிய விருந்தும்' என்று பெயரிட்டு நான் அவரிடம் காண்பித்தேன். அதை வாசித்துவிட்டு புன்னகைத்தார். அவர் புன்னகையில் நான் மலர்ந்தேன். அவர் மகிழ்ந்து கொண்டார், நான் நெகிழ்ந்து கொண்டேன். இவ்வாறு தட்டிக் கொடுத்துத் தமிழையும் தன் இன்னொரு நகலாய் என்னையும் வளர்க்க ஆசைப்பட்டார். அவரது உந்துருளியில் என்னை ஏற்றிச் செல்லுவார். அவருடன் செல்லும் போது வீதி வீதியாய் தமிழ் சொல்லிக் கொடுத்தார். நாளாக நாளாக பழமொழிகளும் உவமைகளும் சிலேடைகளும் எனக்குள் பூக்கத் தொடங்கின. என் தமிழை வளர்ப்பதில் தாய்ப் பாலூட்டிய தந்தை இவர். இன்னுமொன்று சொல்கிறேன். எனக்கு உந்துருளி (Motor cycle) ஓட சொல்லிக் கொடுத்தவரும் அவர் தான். தனது உந்துருளியில் எனக்கு பயிற்சி கொடுத்தார்.

கல்லூரிக் காலங்களில் இவரிடம் படிக்கும் நாட்களில் ஒருபோதும் நான் அச்சப்பட்டுப் படித்ததில்லை. வகுப்பறை நேரங்களில் இவர் ஆசிரியராகவும், மற்றைய நேரங்களில் ஓர் இரத்த உறவுக்காரர் போலவும் இருந்திருக்கின்றார். சில வேளைகளில் கோபிப்பார். எனக்குத் தெரியும், குருவின் கோபம் என்பது செடியின் முள்ளே தவிர செருப்பில் முள்ளல்ல. தண்டிப்பதிலும் தர்மம் காத்தீர்கள். தேரின் கீழ் தேசிக்காய் நசிவதும் விபத்து தானே? எங்களை நீங்கள் தேசிக்காயாய் நசித்ததில்லை. " நீங்கள் எல்லோரையும் மன்னிப்பதால் சிலர் உங்களை மன்னிப்பதில்லை சேர்" என்று அந்நாளில் உங்களுக்கு நான் சொல்லுவதுண்டு. அதற்காக மன்னிப்பதை நீங்கள் நிறுத்திக் கொண்டதுமில்லை. அலைஅடித்த போதும் நீங்கள் கரையைக் காத்த கரம்!



ஒரு சம்பவம். அப்போது எங்களுக்கு க.பொ.த. உயர்தர பரீட்சை நிலையம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் என்று அறிவிக்கப்பட்டது. 1997ஆம் ஆண்டு ஆவணி மாதம் தமிழ்ப் பாடப் பரீட்சை. அந்நாளில் சேர் என் வீட்டுக்கு வருகிறார். என் வீட்டிலிருந்து பரீட்சை நிலையம் வரை என்னை அழைத்து வந்து வாழ்த்திப் பரீட்சைக்கு வழி அனுப்புகிறார். இந்தப் பொதுநலப் புனிதரை என் அணுக்களின் கணுக்கள் எல்லாம் நன்றியோடு பார்க்கிறது. இவரிடத்தில் கல்வி கற்றவர்கள் ஆசிரியராக, அதிபராக பல்வேறு பதவி நிலைகளில் பணியாற்றுகிறார்கள். இன்னும் சிலர் வைப்பகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் பல்வேறு களங்களில் கடமையாற்றுகின்றனர். இப்போதும் ஏராளமானோர் பல்கலைக்கழகங்களில் கற்றுக் கொண்டிருக்கின்றனர். உங்களிடம் க. பொ. த. உயர்தரம் படித்து பல்கலைக்கழகம் சென்ற முதல் அணி மாணவர்களில் நானும் ஒருவன் என்று சொல்லும் அந்தப் பெருமையின் முகவரிக்குரியவர் நீங்கள் தான் சேர்.

பழகுவதற்கு சலிப்பேற்படாத பண்பாளர். அவர் எளிமையானவர் என்பதற்கு என்னிடத்தில் ஏராளமான பதிவுகள் உள்ளன. பல்கலைக்கழகத்தில் படித்த காலங்களை விடவும் கல்லூரியில் கற்ற காலங்களே சுவையானவையாக இருந்தன. க.பொ.த. உயர்தரத்தை பூர்த்தி செய்த பின் ஒரு நாள் சேர் என்னைப் பார்த்து, 'சில வேளைகளில் என்னிலும் நீ உயர்ந்தவன்' என்றார். நான் கேட்டேன் '' ஏன் இந்த அவையடக்கம்?'' என்று. அவர் சொன்னார். ''ஒருவரிடம் ஒன்றை நான் எதிர்பார்க்கும் பொழுது அவர் உயர்ந்தவர் தானே! கற்பிக்கும் போது நீ மாணவன், இப்போது மாணவனல்ல அதைவிட..... அதைவிட.... அதைவிட.... மேல்'' என்றார். அவர் எதிர்பார்த்ததெல்லாம் என் அன்பை மட்டுமே. இன்னோர் சந்தர்ப்பத்தில் இந்தியாவிலிருந்து சேர் தாயகம் திரும்பும் போது அவரிடம் நான் வேண்டுகை செய்திருந்த கவிஞர் வைரமுத்துவின் புத்தகங்களை மறுப்பேதுமின்றி வாங்கி வந்து தந்தார். கல்விக் கர்வமோ, பதவிப் பெருமையோ இல்லாத பெருந்தன்மைக்குரியவர். நான் அகலக்கால் பதிக்க வேண்டுமென்று அவர் ஆழமாக ஆசைப்பட்டு வந்தார். நீங்கள் செருக்கின் சிகரத்தில் இருக்காத சிற்பி, நீங்கள் உளி பிடித்துச் செதுக்கியவையெல்லாம் கோபுரத்தூண்களாயின.

நான் சேர் வீட்டுக்குப் போனதை விடவும் சேர் எனது வீட்டுக்கு வந்தது தான் அதிகம். அவரது கனிவான பேச்சும் அவரிடம் நான் கண்டறிந்த அவரது பல காலப் பட்டறிவும் அவர் மீது ஒருவித பாசத்தையும் மரியாதையையும் விசுவாசத்தையும் வளர்த்து விட்டன. தமிழ் மொழிப் பாடத் திட்டத்திலுள்ள தேவைகள் மட்டுமன்றி என் வாழ்வின் கசப்பான நேரங்களில் கூட ஆறுதல்படுத்துவதில் எனக்கு உளவியல் வைத்தியம் செய்த வைத்தியராக இருந்திருக்கின்றார்.

உலகம் மெது மெதுவாக மனிதகுல நேசத்துக்கு விடை சொல்லிக் கொண்டு வரும் வேதனை மிகுந்த இந்த நூற்றாண்டில், இவர் சில மனிதகுல நேசத்தின் வாசல்களைத் திறந்து கொண்டார் என்பது உயிருள்ள சான்றுகளோடுள்ள உண்மை. தன்னிடத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஏற்படும் பொருளாதார நெளிவுகளைச் சீர்படுத்த தயங்கியதில்லை. ஒரு வள்ளலின் வாசல் போல எப்போதும் இவர் இதயம் திறந்தே கிடந்தது. எடுகாட்டாக் என் நண்பன் விஜயகுமாருக்கு இவர் ஏணியும் தோணியுமாய் இருந்திருக்கிறார். அவரது திருமண விழாவையும் இவரும் இவரது மனைவியும் தந்தையும், தாயுமாக முன்னின்று நடாத்தி வைத்திருக்கின்றனர். பசி வந்தால் பத்தும் பறந்து போகும். இவர் செய்து கொண்ட உத்தி, பசியை பறக்க விட்டு அதன் பின் பாடம் சொல்லிக் கொடுத்தது. தன்னிடத்தில் கல்வி கற்ற மாணவர்களைத் தன் சொந்தப் பிள்ளைகளை ஒருவர் நேசிப்பது போல் நேசித்து சோறு கொடுத்தும் பிற உதவி செய்தும் உயர்த்தியிருக்கின்றார். தன்

உழைப்பின் ஒரு பகுதியை மாணவர் சிலரின் உயர்வுக்கு உதவியிருக்கிறார். திறமை குறைந்து காணப்படும் மாணவர்களை உற்சாகப்படுத்தி அவர்களின் உளவியலைத் தூண்டிவிடுவார். இதனால் புழுவும் புலியாகி விடுகிறது. இன்னோர் எடுகாட்டாக ஒருவரை சொல்கிறேன். தம்பி சரூபன், இந்த வெற்றிக் கனியை அவரிடத்தில் பெற்றவர். விஜயகுமாரும் பல்கலை சென்றார். சரூபனும் பல்கலை சென்றார். இப்படி ஏராளமானோருக்கு ஏணியானார். எங்கள் முதல் அணிக்கு (1997) பின்னால் ஏராளமான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியிருக்கிறீர்கள். நீங்கள் முத்திரை ஒட்டி, முகவரி எழுதி அனுப்பப்படும் அத்தனை தபால்களும் பல்கலைக்கழகத்தைத் தான் சென்றடைகின்றனவே.

சில மாதங்களுக்கு முன் ஓர் நாள் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் சந்தித்தேன். அப்போது மணிக்கம்பி ஆறைத் தொட்டுச் சென்று கொண்டிருந்த அந்திப் பொழுது. ஆலய வழிபாட்டை முடித்துவிட்டு சேர் உள் வீதியிலிருந்து வெளி வீதிக்கு வந்து கொண்டிருந்தார். "சேர் வீட்ட வெளிக்கிட்டீங்களோ?" என்று வினவுகின்றேன். "இல்லை.... இல்லை...." என்று தொடர்கிறார். உண்மையில் அது வீடு திரும்ப வேண்டிய அந்தி நேரம் தான். ஆனால் அவர் சொன்ன பதில் "இல்லை.... இல்லை... நான் ஒருக்கா பள்ளிக்கூடம் போட்டுப் போகப்போகிறேன்" என்று. அவரது பதிலைக் கேட்ட எனக்கு கோயிலின் உள்ளே உள்ள 'கருணை'யை வெளியே பார்த்தது போல வியந்து போனேன். மணமுள்ள கல்லூரி மண்ணை மணம் முடித்திருப்பாரோ என்று சொல்லுமளவு இவர் ஓர் கல்லூரிக் காதலனாக இருந்திருக்கின்றார். பணி ஓய்வை அண்மித்த ஆண்டுகளில் இவர் தன் வீட்டில் இருந்த மணித் துளிகளை விடவும் கல்லூரியில் இருந்த மணித்துளிகள் தாம் அதிகம். சேர் நீங்கள் வந்தமர உங்கள் சேவைக்காக இந்தக் கல்லூரி எப்போதும் ஓர் தங்க நாற்காலியை தயார் செய்து வைத்துக் கொள்ளும்!

அண்மையில் பழைய மாணவர் சங்க முகநூலில் (Facebook) நான் பதிவேற்றிய கல்லூரி தொடர்பான பதிவொன்றைத் தனது முகநூல் மூலம் விஞ்ஞான விரல் தொட்டு வாசித்து விட்டு கல்லூரியில் அத்தனை ஆசிரியர்களுக்கும் அதை வாசித்துக் காட்டியதோடு தொலைபேசி அழைப்புச் செய்து என்னையும் புகழ்ந்து புளகாங்கிதமடைந்தீர்களே என் மொழியின் செழுமை நன்றென்று சொல்லி. இந்த எழுத்துக்களின் மூலமே நீங்கள் தான் சேர். நதி எங்கேயும் சென்று நனைத்துக் கொள்ளட்டும் அதன் ஊற்று நீங்கள் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். அகவை அறுபது காணும் பிறந்த நாளில் மணிவிழா நாயகனை வாழ்த்த உங்கள் பிள்ளைகள் இன்று பூக்களோடும் பொருட்களோடும் வந்து நிற்கிறார்கள். நானோ தமிழின் மொத்த எழுத்துக்களையும் எடுத்து வந்திருக்கிறேன். மொழி தந்தவருக்கு மொழி மூலமே வாழ்த்துக்கள். தமிழின் 247 எழுத்துக்களும் உங்களை எப்போதும் வாழ்த்தும். மேற்கை விரும்பாத இந்தச் சூரியனுக்கு ஒரு நட்சத்திரத்தின் நன்றி.





**ந. தர்சனா,**
(பழைய மாணவி)
முதலாம் வருடம் கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.


# அமிர்த வேந்தன்

யாழ்ப்பாண மண்ணிலே புகழ் பூத்த பாடசாலைகளில் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் ஒன்றாகும். இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு பிரதி அதிபராகப் பணியாற்றிய, என்றும் ஆனந்தமாகவும் தெய்வமாகவும் விளங்கும் திரு. இளையதம்பி ஆனந்தநடராசா அவர்களின் ஆசிரியர் சேவையானது உலகம் போற்றும் அளவிற்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. எமது ஆசான் 37 வருட ஆசிரிய சேவையிலும்எமது பாடசாலையில் 19 வருடங்களாக ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் பிரதி அதிபராகவும் பல்வேறு பதவிகளில் இருந்து பாடசாலை அபிவிருத்தியில் முன்னின்று உழைத்தவர். மாணவர்களுக்கு தமிழ், புவியியல், சமூகக் கல்வி முதலிய பாடங்களை தெளிவான முறையிலும், இனிமையாகவும் அன்பாகவும் கற்பிக்கும் ஆற்றல் மிகுந்தவர். எமது ஆசான் கற்பித்தல் நடவடிக்கைகளோடு இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் சிறந்த ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும், ஒழுக்க கட்டுப்பாடுகளில் கண்டிப்பாளராகவும் இருந்து வந்தார். இவர் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பங்கள் முதற்கொண்டு விண்ணப்பங்கள் அனைத்தையும் தானே தனித்து நின்று வருடா வருடம் பூர்த்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"ஆசிரியர் சேவையே மகேசன் சேவை" என மனதில் நிறுத்தி உலகம் போற்றும் அளவிற்கு சேவை செய்த உத்தம மகான். எமது ஆசானின் சுறுசுறுப்பான நடையும், புன்னகை பூத்த முகமும், பாரபட்சமின்றிய நகைச்சுவையான தமிழ் ஓசையோடு விளங்கும் வெளிப்படையான அன்பான இனிமையான நம்பிக்கை நிறைந்த பேச்சும், ஆயிரம் அர்த்தங்கள் மின்வெட்டும் அவரது பார்வையும் அனைவரது உள்ளங்களையும் மெய் சிலிர்க்க வைக்கும். இவர் மாணவர்களுக்கு செய்த உதவியோ சொல்லில் அடங்காது. ஒவ்வொரு மாணவரின் குடும்ப நிலை பற்றி அறிந்து வைத்திருப்பதோடு, அவர்கள் படிப்பதற்கு தடையாக என்ன என்ன விடயம் உள்ளது எனக் கண்டறிந்து அதற்கேற்ப செயற்படுவார். படிப்பதற்குத் நிதி வசதி இல்லாத மாணவர்களுக்கு நிதிவசதிகளை வழங்கி மாணவர்களின் முன்னேற்றத்துக்கு அரும்பாடுபட்டார். இவருக்கு நாம் என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது. தனது சொத்துக்களை விற்று பல மாணவர்களுக்கு உதவி செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எமது ஆசான் தமிழ் மீது ஆழ்ந்த புலமை உள்ளார் என்பதை அவருடைய பேச்சினை வைத்தே அறிந்து கொள்ள முடியும். இவரிடம் கல்வி கற்று நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கும், தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் சென்றுள்ளனர். இவர் மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் நண்பர்களாகவும் சொந்தப் பிள்ளைகளாகவும் உறவாடுவர். மாணவர்களின் குறைநிறைகளை உடனுக்குடன் சொல்லுவார்.

நான் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் உயர்தர கற்கை நெறியை பயிலுவதற்காக வந்த பொழுது, முதல் முதலாக ஆனந்தநடராசா ஆசிரியரையே சந்தித்தேன். அவரது பேச்சு என்னை மிகவும் கவர்ந்ததோடு, பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கும் எமது ஆசான் உறுதுணையாக இருந்தார். எமது ஆசான் நாம் உயர்தரம் கற்கும் ஆண்டில் (A/L 2011) முதல் முதலாக புவியியல் பாடநெறியைக் கொண்டு வந்ததோடு, புவியியல் பாடத்தையும் தானே முன்வந்து கற்பித்து பல்கலைக்கழகத்திற்கு 3 மாணவர்களை புவியியல் பாடத் துறையை விசேட துறையாகப் படிக்கச் செய்த பெருமைக்குரியவர். எந்த உதவி கேட்டாலும் இல்லை என்றே சொல்ல மாட்டார். நான் எமது ஆசானிடம் 2 வருடங்கள் கல்வி கற்றிருந்தாலும் பல விடயங்களை அறிந்து கொண்டேன். எமது ஆசானுக்கு பாடசாலை விடுமுறை நாள் என்றே கிடையாது. சனி, ஞாயிறு பாடசாலை விடுமுறை நாட்கள் என அனைத்து நாட்களிலும் பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலை சமூகத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இவரது பெருமைகளையும் சேவைகளையும் சொல்லிக் கொண்டே போகலாம். எமது ஆசான் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் நோய் நொடி இன்றித் தனது மனைவியாருடன் நீடுழி காலம் வாழ வாழ்த்துகின்றேன்.





**செல்வி துஷாந்தி நவரத்தினராசா**
(பழைய மாணவி 2011 A/L கலைப்பிரிவு)
முதலாம் வருடம்,
புவியியல் துறை, கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# அகல் விளக்கின் ஒளியில் ஆனந்தம்

எண்பதாண்டுகளுக்கு மேலாக கல்விப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் தனது பணியை செம்மையாக செய்து இளைப்பாறும் திரு.இளையதம்பி ஆனந்தநடராசா அவர்கள் இப்பாடசாலையில் 19 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார். அத்துடன் இக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ள இவர் 9 ஆண்டுகள் பிரதி அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். எமது கல்லூரியின் வளர்ச்சியில் முழு மூச்சாக செயற்பட்ட இவர் கல்வித்துறையில் குறிப்பாக தமிழ்ப்பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற பெருந்தகை. மருதனார்மடத்தை அலங்கரிக்கின்ற செம்மலினை அறியாதவர்கள் யாருமில்லை. இவருடைய பல்திறப்பட்ட வித்துவ ஆற்றலில் இவரிட த்தே என்னைக் கவர்ந்தது கற்பித்தலின் நுட்பம். தமிழ்ப்பாடத்தில் குறிப்பாக ஒரு புறநானூற்றுச் செய்யுளாயின் அப்பாடலின் கருத்துச் செறிவு இலகுவில் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் விளங்கப்படுத்தும் ஆற்றல் தனித்துவமானது.

அவர் தன் அன்பாலும் ஆளுமையாலும் சகலரையும் தன்பால் ஈர்த்தெடுத்து இக்கல்லூரியை முன்னேற்றப் பாதையில் வழி நடாத்தினார். இன்று வரை நடாத்தி வருகின்றார். மாணவர்களது ஒழுக்க நலனில் சிறப்பான அக்கறை உள்ளவர். ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனி அக்கறையுடைய இவர் மாணவர்களின் உள்ளத்தின் பாங்குகளை உய்த்தறிந்து மாணவரை உறுதிபெறு நெறியுடை நற்சமுதாய உறுப்பினராய் கொள்கையிலும் தன்மையிலும் குணத்திலும் சிறந்த கருணையுள்ளம் படைத்த மகானாக உழைத்தவர் இவர். வெளிப்படையானவர். குறிப்பிட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பொருளாதார உதவிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இவருடைய ஆழ்ந்த புலமையும் நிர்வாக ஒழுங்கமைப்பும் சிறப்பானது.

எங்கள் கல்லூரி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தர பரீட்சை, க.பொ.த உயர்தர பரீட்சை என்பவற்றில் தொடர்ச்சியாக அதிகரித்த பெறுபேற்றை பெற்றுவருகின்றது. தமிழ்த்தினம், ஆங்கில தினம் ஆகிய போட்டிகளிலும் இவர் ஆசிரியர்களுடன் இணைந்து தானே குறிப்பிட்ட போட்டிகளுக்கான செய்யுள்களை தேடிப்பெற்று மாணவர்களுக்கு தனது கைப்பட எழுதி மனப்பாடம் செய்ய வழிவகுத்து பயிற்சியளிக்கும் கல்விச் சேவை தனித்துவமானது. இணைப்பாட விதான செயற்பாட்டில் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றி முதன்மை நிலையைப் பெற வழிவகுத்தார்.

வகுப்பறைக்கு வெளியேயும் இவரிடம் கற்றுக்கொண்டோம். காலைப் பிரார்த்தனையின் போது மாணவர்களிற்கு சிறந்த முதுமொழிகளைக் கூறுவதில் வல்லவர். எங்கள் கல்லூரியிலிருந்து வெளிவரும் 'முகில்' காலாண்டிதழ் மாணவர்களின் ஆக்கங்களையும், கல்லூரியின் செய்திகளையும் தாங்கித் தொடர்ந்து வெளிவரவும் கல்விப்புலத்தில் இதழ் விரித்து மணம் பரப்பவும் அத்திபாரமாகவும் திகழ்ந்தவர் எங்கள் மணிவிழா நாயகனே. இவரது பணியில் 'சிந்து நடைக் கூத்துப் போட்டி'யில் தேசியமட்டம் வரை மாணவர்கள் தொடர்ந்து பங்கு பெற ஊக்கியாக இருந்தார்.

'கல்வி தறுகண் இசையை கொடையென

சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே'


என்ற ஒல்காப் பெருமையின் வாக்கிற்கு இலக்கணமாய் திகழ்ந்த உத்தமர். மாணவர்களின் மேன்மை கொண்ட களங்கமற்ற உள்ளம் கொண்ட மகானாவார். எனது ஏற்றத்துக்கு ஏணியாக இருந்து இன்று நான் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே கலைத்துறையில் உயர் நிலையை எய்துவதற்கு உறுதுணையாக விளங்கியவர்.

அன்புடன் பண்பையும் அறிவுடன் பரிவையும் தருகின்ற மணிவிழா நாயகன் இன்றுவரை ஆசிரியர்குழாத்துடனும் பெற்றோர்களின் ஆதரவுடனும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்காகவே துடித்துக்கொண்டிருக்கின்றார். தன்னலம் கருதாது பிறர்நலத்தை கருத்தில் கொண்டவர் எங்கள் பிரதி அதிபர். மாணவர்களுடன் மட்டுமல்லாது ஆசிரியர்கள் பெற்றோர்கள் கல்விசாரா ஊழியர்களது நலன்களிலும் ஈடுபாடுள்ளவராகத் திகழ்ந்தார். இவரது அரிய சேவைக்கு இவரது துணைவியார் துணையாக இருக்கின்றார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்டவர். தளரா முயற்சி, உறுதி மிக்கவர். இன்று க.பொ.த உயர்தரம் **2016** கலைப் பிரிவில் கல்வி கற்கும் மாணவரான எனது தம்பி கபில்ராஜ் என்பவரது இசைத்திறமையை வளர்க்கும் நோக்கில் எங்கள் பிரதி அதிபர் மிகப்பெரிய கடமை செய்தார். **2011**ஆம் ஆண்டு குறித்த எனது தம்பியை மிருதங்க வகுப்பிற்காக இணுவில் கந்தசுவாமி இளந்தொண்டர் சபைக்கு விஜயதசமி அன்று மிருதங்க வித்துவான் மா.ந.பரமேஸ்வரன் அவர்களிடம் அழைத்துச் சென்று அவரது இசைத்துறை வளர்ச்சிக்கு கால்கோள் செய்து வைத்தார். எங்கள் பிரதி அதிபருக்கு இசையில் ஈடுபாடுள்ள இன்னுமொரு சம்பவம், கல்லூரி நாட்களில் நாங்கள் வகுப்பில் சங்கீதம் பயிலும்போது சங்கீத வகுப்பறையின் அருகில் வந்து நின்று எங்கள் இசையை இரசிப்பார். அவர், இசையை ரசிப்பதை நாங்களும் ரசித்திருக்கிறோம்.

**2011**ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர மாணவர்கள் கற்பதற்கென இக்கல்லூரியில் முதன் முறையாக புவியியல் பாடத்துறையை அறிமுகம் செய்து தானே அப்பாடத்தைக் கற்பித்து ஆசிரியர் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்தார். இந்த அணியில் நானும் எனது நண்பர்களான தர்சனா, சுதர்சன் ஆகிய மூவரினதும் இலட்சியம், 'பல்கலைக்கழகத்தில் புவியியல் பாடத்தை சிறப்புப் பாடமாக கற்க வேண்டும்' என்பதாக இருந்தது. இந்த எங்கள் இலட்சியக் கனவை தானும் சுமந்து நனவாக்கியவர். இதனால் எங்கள் எதிர்கால வாழ்வின் வசந்தம் நாங்கள் நினைத்தபடி அமையும் என்ற ஆனந்தத்தில் அவருக்கு எப்போதும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களானோம்.

கல்வி வரலாற்றில் பல கல்விமான்களை உருவாக்கிய அவர் செய்த பெரும் பணியை நாம் மறவோம். செந்தமிழ் மரபின் படிவமாக விளங்கும் செம்மலின் சேவைக்காலம் உன்னதமாகும். அவர் பாம் பதித்த இக்கல்லூரி மண் அவர் புகழை என்றும் ஏற்றி நிற்கும். இம்மகானின் ஓய்வு வாழ்வு வளம் பெற எல்லாம் வல்ல இறைவனை அகமார பிரார்த்திக்கின்றேன்.



செல்வராசா கஜநீதன்
(பழைய மாணவன்)
கனடா.

# கண்டங்கள் கடந்து நின்று நன்றியுடன் வாழ்த்துகின்றேன்

தாய் மொழியாம் தமிழ் மொழியைக் கசடறக் கற்பிக்கும் எமது ஆசானுக்கு இந்த மணிவிழா மலரில் எனது நன்றி கலந்த வாழ்த்துக்கள் எழுத்துருவாகியிருப்பதை எண்ணி மகிழ்வடைகின்றேன். சண்டிலிப்பாய் இந்து அன்னையின் மழலைகளுக்கெல்லாம் தமிழ் அமுதூட்டும் ஆசிரியப் பெருந்தகைகளில் எம் ஆனந்தநடராசா ஆசிரியரும் ஒருவர். அவரிடம் படித்த காலங்களை எண்ணிப் பார்க்கையில் மீண்டும் ஒரு தடவை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடந்தால் நன்றாக இருக்குமென்றே மனம் அலை பாய்கின்றது. ஏனெனில், மீண்டும் ஒரு தடவை நம் ஆசானிடம் தமிழ் படிக்கலாம் என்ற ஆவல் தான்.

ஆசான்களுக்கு மிகப் பொருத்தமான உதாரணமானவர்களுள் நம் ஆசானும் ஒருவர். அதற்கு ஒரு சான்று தான் இன்று அவர் இந்த மணிவிழா நாயகனாக மிளிர்கின்றார். தமிழ் இலக்கண, இலக்கியங்களின் பொருளுரைகளை விபரித்தும். மாணவர்களுக்கு சுவைக்குமாறும் புகட்டுவதில் நம் ஆசானிற்கு ஒரு தனியிடம் உண்டு.


தமிழினை கற்பிப்பதில் அவர் எவ்வளவு சிறந்தவரோ அது போலவே அத்தமிழினை மாணவர் மனதில் பதிக்கவும் நல்லொழுக்கத்தை விதைக்கவும் அவரின் தண்டனைகளும் சிறப்பாகவே இருக்கும். உண்மையினை கூறின், என் பள்ளிக்கூட வாழ்க்கையில் நான் அச்சம் கொண்ட ஆசிரியர்களுள் நம் ஆசானிற்கும் ஓர் இடம் உண்டு. ஆசிரியர்கள் வழங்கும் தண்டனைகள் வரவேற்கப்பட வேண்டியவைதான். அவை ஒரு மாணவன் நல்வழிப்படவே ஆகும். ஆயினும் பள்ளிப் பருவத்தில் அது ஒரு புரியாத புதிர் தான். எமக்கு ஒரு கசப்பான மருந்து தான். அப்புதிர் எனக்குப் புரிந்தது. நான் க.பொ. த. சாதாரண தர பரீட்சையில் தமிழில் சிறப்புத்

தேர்ச்சி பெற்றபோது தான். அன்று என் ஆசான் வழங்கிய சில கசப்பான மருந்துகள் பரீட்சைப் பெறுபேற்றில் இனிப்புகளாய் சுவைத்தன.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப எம் ஆசான் கல்வியிலும், ஒழுக்கத்திலும் எனக்குக் காட்டிய வழிகள் என்னை உயர்த்தியே நின்றன, நிற்கின்றன. அதற்காக என் நன்றிகளைக் காணிக்கையாக்குவதில் பெருமை அடைகின்றேன். ஆயினும் அருகில் நின்று ஆசானின் இந்த மணிவிழாவினைச் சுமக்கும் தோள்களுள் ஒன்றாக நான் இல்லையே என்ற வருத்தங்கள் மனத்தினை ஆட்கொண்டு தான் நிற்கின்றன. ஆயினும் என்னைப் போன்ற பல மாணாக்கர்களை வெற்றிகள் சித்திக்கும் வண்ணம் உந்தித் தள்ளிய எம் ஆசானிற்கு இந்த மலரில் எனது வார்த்தைப் பூக்களை அவர் பாதங்களில் சமர்ப்பிப்பதில் மனமகிழ்வடைகிறேன்.





**ரஜீபரன்,**
(பழைய மாணவன்)
பிரான்ஸ்

# என் வாழ்வின் வேத ஆறு

*சண்டிலிப்பாய் இந்துவின்
மாணவன் எனக்கு
தந்தையைப் போல
ஒரு வழிகாட்டி நீங்கள்*

*பல்கலை சென்ற பின்னும்
பரீட்சைக் காலங்களில்
நண்பர்கள் நாம்
ஒன்று கூடி கல்வி கற்க
கல்லூரி மடிதந்த - என்
அன்புக்குரிய ஆசான் நீங்கள்*

*இன்பங்களிலும் துன்பங்களிலும்
என் வாழ்வோடு பகிர்ந்து நிற்கும்
என் நண்பர்கள் மத்தியிலே
சக தோழனாகவே மகிழ்ந்தீர்கள்
நீங்கள்.....*

*பிற தேசத்தில் இருந்து - இன்று
என் வாழ்வை திரும்பிப் பார்க்கையிலே
என் வெற்றிப் படிகளிலெல்லாம்
நீங்கள் இருப்பீர்கள்*

*கவிவரிகளால் அடக்கிவிட
முடியாது உங்கள் பணிகளை
பேனா முனைகள் கூட
சிலிர்த்து விடும்*

*கடவுளை யாரும்
நேரில் கண்டறியோம்
கற்பித்தவர் நீங்களே - எனக்கு
கடவுள் என்பேன்.*

*எத்தனை மாணவர்கள்
உங்களால் முத்துக்கள்
ஆகினர்....
அதனால் தான் நீங்கள்
எங்களுக்கு சொத்தானீர்கள்*

*கோடி நன்றிகள் சொன்னாலும்
போதாது
உங்கள் சொற்களே
என் வாழ்வின் வேத ஆறு!*

*மணிவிழா காணும் உங்களுக்கு
மனமார்ந்த வாழ்த்துக்கள்
சொல்லும் உங்கள் மாணவன்....*



**செல்வநேசன் கவிதரன்**
(சுவிஸ்)

# நவீன குருகுல நாதன்

1995 களின் பின்னர் சண்டிலிப்பாய் கிராமத்தின் சிறப்பு மிக்க அடையாளம் எதுவெனில் அது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி என்றால் எவருமே மறுக்க முடியாத மாபெரும் உண்மை. அந்த அடையாளத்தை அடைவதற்கு கல்லூரியின் முன்னாள் முதல்வர் திரு. ச. சிவநேஸ்வரன் அவர்கள் பயணித்த கரடு முரடான பாதையில் அவரோடு கரம் கோர்த்துப் பயணித்த பெருந்தகைகளில் பிரதி அதிபர் திரு. இ. ஆனந்தநடராசாவும் ஒருவர்.

1995 களின் பின்னர் சண்டிலிப்பாய் மண்ணில் தமிழ் சட்டென்று வளர்ச்சி பெற்று மாணவ சமூகம் ஏறுமுகம் கொண்டது என்றால் ஆசிரியர் ஆனந்தநடராசா அவர்களின் கைங்கரியம் என்கிற உண்மையை ஒவ்வொரு மாணவரது ஆழ்மனதும் அடித்துச் சொல்லும்.

மாணவர்களைத் தன் அதிகார எல்லைக்குள் இழுத்து வைக்கின்ற பண்பு அற்றவர். உரிமையுடன் கூடிய அன்பு. நளினமான வார்த்தைகள். எந்தவொரு மாணவரையும் சட்டென்று புரிந்து கொள்ளல் இதுவே இவரது முழுப் பலம். இதனால் மாணவ வளத்தை செம்மைப்படுத்தி செழுமைப்படுத்தினார்.

அதனூடாகவே மாணவர்கள் ஒவ்வொருவர் மனதிலும் கல்லூரியின் மீது தீராத காதலை தூண்டியிருக்கிறார். “ஆனந்தன் சேர்” என்று ஒரு மாணவன் அழைக்கின்ற போது அவர் உள்ளத்தில் இருந்து ஆனந்தப் பெருவெள்ளம் ஊற்றெடுத்து வார்த்தைகள் வரிசைகட்டி நிற்கும். அந்த அளவுக்கு ஒவ்வொரு சீடனையும் ஆழமாய் நேசிக்கும் பக்குவம் கொண்டவர்.

தனது மாணவப் பருவத்தில் தனக்குண்டான தடைகளை மாணவர்களுக்கு நினைவூட்டி அது போன்ற தடைகள் எந்தவொரு மாணவனுக்கு இருக்கின்றதோ அதை அகற்றும் தடையகற்றியாக தன்னை மாற்றி அவன் வெற்றிப் பாதைக்கு வழிகாட்டுபவர்.

உணவு கொடுத்து உடை கொடுத்து அறிவு கொடுக்கின்ற குருவினை குருகுலக்கல்வி என்ற பாரம்பரிய கல்வி முறையை ஏட்டினில் படித்திருக்கின்றோம். அந்த முறையினை ஆனந்தன் ஆசிரியரின் வீட்டில் பார்த்திருக்கின்றோம்.



ஊர் கூடித் தேர் இழுப்பது போல் எழுத்தறிவித்த சண்டிலிப்பாய் இந்துவின் தமிழ்ப் பிதாவிற்கு ஒரு கிராமமே அணி திரண்டு மணிவிழா என்னும் மகுடம் சூட்டி மனம் நிறைவு பெறுகின்றதென்றால் அவர் தன் சேவைதனை மனம் நிறைவோடு நிறைவாக்கியிருக்கின்றார் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதல்ல. அவர் ஆற்றிய சேவை தனை இந்தச் சமூகம் இக்காலமல்ல எக்காலமும் மறந்தேனும் மறந்துவிடாது.

நான் இங்கு புலத்தில் வாழ்ந்தாலும் நீங்கள் கொடுத்த தமிழ்ப் பலத்தில் வாழ்கிறேன். இப்போதும் இந்த மண்ணில் நீங்கள் தந்த தமிழே மணம் வீசுகின்றது. கவியரங்கும் பட்டிமன்றமும் செய்யும் போதெல்லாம் உங்களை நன்றியோடு நினைத்துப் பார்ப்பதுண்டு. சண்டிலிப்பாய் இந்துவின் ஒவ்வொரு வளமும் பிரதி அதிபர் திரு. இ. ஆனந்த நடராசா அவர்களின் நாமத்தை நாள்தோறும் உச்சரிக்கும். இவர் இன்று போல் என்றுமே உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ தமிழ்ப் பிதாவின் அன்பு மாணவனாகிய நான் எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்தனை செய்து அமைகிறேன்.



**திருமதி அஞ்சனா முரளி**
(பழைய மாணவி)
அவுஸ்திரேலியா

# நெஞ்சில் நிற்பவை...

இன்று ஆலமர விழுதுகளை வளர்த்து நிற்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் விதைகளாக இருந்தவர்களில் நானும் ஒருவர். 1995 களில் எமது கல்லூரியின் முதல் உயர்தர வகுப்பு கலைப்பிரிவு 26 மாணவர்களுடன் ஆரம்பமானது.

அன்று எமது வகுப்பு ஆசிரியராக கடமையாற்றியவர் திரு. ஆனந்தநடராசா ஆசிரியர். என்றுமே எனது நெஞ்சில் பசுமரத்தாணி போல நிற்கிறது. புதுப்பாடத்திட்டம் தொடங்கி கற்பதற்குக் கடினமாக இருந்த வேளை எமது ஆசிரியர் அதனைச் சவாலாக எடுத்து எமக்குப் புரியும் வகையில் பாடம் கற்பித்தார். அதன் அறுவடையாக எமது வகுப்பில் 3 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர் என்று கூறிக் கொள்வதில் என்றுமே பெருமைப்படுகின்றேன்.

எமக்குக் கல்வி கற்பிக்கும் போது தனியாக ஆசிரியராக மட்டும் என்ற வரையறைக்குள் நின்று விடாது எமக்கு ஏற்படும் இன்னல்களையும் தீர்த்து வைக்கும் சக தோழனாகவும் அன்று திகழ்ந்தார்.

எமது ஆசிரியர் கற்பித்த தமிழைப் புலம்பெயர் தேசத்தில் இன்றும் வாழ வைக்கிறேன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகின்றேன். 'தமிழ்க் கல்விக் கழகத்தில்' புலம்பெயர் தேசத்தில் வாழும் சிறார்களுக்கு கற்பிக்கிறேன். நான் எங்கு சென்றாலும், எங்கு வாழ்ந்தாலும், எமது கல்லூரிக்கும் ஆசிரியருக்கும் பெருமையீட்டித் தருவேன்.













**கிருஷ்ணமூர்த்தி சித்திரவேல்**
(பழைய மாணவன் இ/றை தமிழ் வித்தியாலயம்)
பணிப்பாளர்
ஹட்டன் சீடா நிலையம்,
கல்வி அமைச்சு. மத்திய மாகாணம்.

# அர்த்தமுள்ள அறுபதுகள்

இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பெரும் பங்களிப்பைச் செய்துவருகின்ற மலையக பெருந்தோட்டத்துறை, மக்கள் சமூகத்தின் பல தளங்களிலும் பின்னடைவை எதிர் நோக்கியிருந்த காலமது. (இன்றுள்ள நிலைமையை விட தீவிரமாக) இதற்குக் கல்வி ரீதியான பின்னடைவும் ஒரு காரணம் என்பது பலரது கருத்தாகும்.

அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட முறையான இலவசக்கல்வித்திட்டம் ,தீவின் ஏனைய பாடசாலைகளுக்கு 1940ஆம் ஆண்டுகளிலேயே ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. ஆனால் மலையக தோட்டப்புறப் பாடசாலைகள் 1970ஆம் ஆண்டுகளின் இறுதியில் தான் அதாவது முப்பது ஆண்டுகள் கடந்து தான் இத்திட்டத்தினுள் முழுமையாக சேர்த்துக்கொள்ளப்பட்டன.

இந்த காலதாமதம் மலையக பாடசாலைகளை தேசிய கல்வி நீரோட்டத்தில் இணையவிடாது தடுத்தது. விளைவு? கல்வித்துறையில் மலையக தமிழ் சமூகம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கிறது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்குக் கல்வி முக்கிய காரணமாக விளங்குகிறது. கல்வியும் அபிவிருத்தியும் சமாந்தரமாக அமையும் பொழுது தான் அச்சமூகம் முழுமையான அபிவிருத்தியை நோக்கிய பாதையில் பயணிக்கும். ஆனால் மலையகத்தைப் பொறுத்த வரையில் இவை எதுவும் முழுமையடையாத நிலையில் தான் காணப்பட்டது. சில நேரங்களில் எதிர்காலம் குறித்த சிந்தனைகள் எதுவுமற்ற ஒரு சமூகமாக தோற்றமளிப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இச்சமூகத்தின் வாழ்க்கைநிலை மேம்பட வேண்டுமானால் எதிர்கால சமுதாயம் கல்வியில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியிருக்கிறது. இதற்காக பெற்றோர் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டியது மிகஅவசியமாகும்.

பெற்றோர் மத்தியில் போதிய அறிவின்மை, குடும்ப வறுமை, பொருளாதாரப்பிரச்சினை, மது பாவனை ஆகிய விடயங்கள் பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்க்கையில் மேம்பாடடைய விடாமல் தடுப்பதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

இவ்வாறான நிலைமைகள் மாறவேண்டுமானால் இந்த மலையக மக்களிடத்தே கருணையும் அன்பும் கொண்ட கடமையுணர்வு மிக்க நல்லாசான்கள் எமக்குக்கிடைக்கவேண்டும்.

நான் எனது மாணவப் பருவத்தை நினைத்துப்பார்க்கிறேன். எந்த அனுகூலங்களையும் எதிர்பார்க்காமல், மாணவர் சேவையே தம்மூச்சென இம் மலையக மண்ணிற்கு சேவித்த ஆசான்களை பல நாள் வியந்து பார்த்துள்ளேன். அவர்களில் என் குருநாதர் ஆனந்தநடராசா அவர்களும் ஒருவர்.

மேற்குறித்த மலையக பாடசாலைகளின், மிகத்தீவிரமான அவலநிலையை யாம் அனுபவித்த பலாங்கொடை என்ற பிரதேசமது. கல்விக்கான அடிப்படை வசதிகள் கூட அமையப்பெறாத இடம். கல்வி கற்பதற்காக வகுப்பறைகளில் நாம் அமர்த்தப்பட்டிருந்தாலும் எதிர்காலம் குறித்த எவ்வித இலக்குகளும் இல்லாத சூனிய வெளியாகவே எம் நிலை இருந்தது.

ஆசான் அவர்களின் அக்கறையான ஈடுபாடும் அரவணைப்புடனான கண்டிப்பும் வாழ்க்கை தொடர்பான புரிதலையும் விருப்பையும் ஏற்படுத்தியது அவரின் சுருக்காமான ஆனால் சுடும் சொற்கள் பலகாலம் என் வாழ்க்கைப் பாதையை சீர்செய்துள்ளது. இமைக்காமல் பார்த்த விழிச்சுடர்கள் வழிகாட்டல்களாக அமைந்தன. உணவும் தந்து கல்வியும் தந்த தாயும் ன்ஆனவர்வ்.

என் குருநாதர் குறித்துப் பேச என் சொற்களுக்குப் பஞ்சமென்பதால் பண்டைய நூல்கள் தொகுத்துக் கூறுகின்ற நல்லாசானின் இயல்புகளனைத்தையும், என்னாசானுக்கும் சமர்ப்பிக்கின்றேன்.

- கொடைக்குணம் உடைய குலத்தில் பிறந்தவர்
- இரக்கம் காட்டும் அருள் உடையவர்
- தெய்வத்தன்மை கொண்டவர்
- கற்பிக்கும் கொள்கையில் உறுதிப்பாடு கொண்டவர்
- மக்களில் மேம்பட்டவர்
- பெருமை, திண்மை, தாங்கும் தன்மை ஆகியன கொண்ட நிலம்போன்ற பண்புள்ளவராய் மாணவரின் முயற்சிக்கு ஏற்பப் பலன் தருபவராதல்
- மலை போல் அளக்கமுடியாத கல்வி வளம், அசையாத்தன்மை, (மாணவன்) வறந்த காலத்திலும் வழங்கும் தன்மை கொண்டவராதல்.
- துலாக்கோல் போல எல்லா மாணாக்கரையும் சமமாக நோக்குதல்
- மலர் போல் அனைவர்க்கும் மகிழ்வும் மணமும் தருதல்.
- உலகியல் அறிவு பெற்றிருத்தல்.
- உயர்குணம் உடைமை

அர்த்தமுள்ள அறுபதுகளைப் பூர்த்திசெய்த என்னாசான் அதன் இரட்டை மடங்கெய்திவிட வாழ்த்துகின்றேன். வாழ்க வளமுடன்

# நாங்கள் கடன்காரர்கள்



**செல்வி ட. சுகன்யா**
A/L (2013)
கலைப்பிரிவு

பச்சைப் பசேலென்ற இந்தப்
பழத் தோட்டத்தில்
பல பயன்மிகு கனிகளைத்
தந்தது
இந்தப் பழமரம்...
ஒரு வசந்தம் நம்
கையில் வசப்பட்டது என்று
இறுமாந்திருந்தோம்
அதனாலோ என்னவோ இன்று
அது இலைகளை எமக்காய்
ஈய்ந்து விட்டு
கிளையோடு போகிறது ஓய்வெடுக்க

பல வைரங்களைப்
பட்டையிட்டு பட்டையிட்டு
ஒளி வீசச் செய்தவரே!
உங்களுக்குத் தெரியுமா
நீங்கள் பல வகையில்
பூசியும் மெழுகியும் மெருகேற்றியவை
ஒரு போதும் மண் வீடுகள்
என்றானதில்லை
அனைத்தும் மனித சரித்திரங்களே!

இத்தனை வருடங்களுமிங்கு
இதமாய் இவ்
இளந்தென்றல் வீசியதில்
கடந்த காலம் கரும்பானது
நிகழ்காலம் நிஸப்தமாகிறது
எதிர்காலமோ இன்றோடு
நெருப்பாய்ப் போகும்....

காட்டுப் பாதையில்
போகும் வண்டிச் சக்கரம் போல
எங்கள் ஒவ்வோர்
வெற்றிப் பயணத்திலும்
தேய்மானமடைந்தது இந்த நிலவு.....

ஓயாமல் அடித்திருந்த
இந்த அலை
இன்றோடு ஓய்வுக்குப் போவதால்
சமுத்திரமும்
சப்தமின்றி அழுதுவிட்டு
ஸர்வமும் அடங்கி நிற்கிறது
எம் கல்லூரி வரலாறு
தன் யுக உறக்கத்தைக்
கலைத்துக் கொண்டு
கண்ணீர் சிந்துகிறது....

செதுக்கிச் செதுக்கிப் பல
சீரிய சிற்பங்களைத் தந்த
சிற்பியே!
நாங்கள் கடன்காரர்களாகவே
இருக்க விரும்புகிறோம்
இன்றோடு
நிலவுக்கும் நட்சத்திரங்களுக்குமான
தொடர்பை
முடித்துக் கொண்டு
கையசைக்க நாங்கள்
விரும்பவில்லை
காலம் முழுவதும் நாங்கள்
கடன்காரர்களாகவே
வாழ்ந்து விடுகிறோம்....!



**தினேஸ் ஏகாம்பரம்** - கலைஞர்

(சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் ஆனந்த நடராசா ஆசானிடம் கல்வி கற்ற மாணவர்கள் சார்பாக )

# சோம்பலறியாச் சுடர் விழியோன்

*சிந்மய பாரதிச் சூரியனில் - அன்று*
*சிறந்து விளங்கிய ஒளிக்கீற்றே*
*சிந்தையில் வாழ்ந்திடும்*
*சீர்வளவாளனே -எமைச்*
*சிகரத்தில் ஏற்றிய ஆனந்தநடராசா*
*ஆசானே நீர் வாழ்க !*

*பெயர்கொண்ட பொருள் போலே - தினம்*
*அவர் நின்ற இடமெல்லாம்*
*பேர் ஆனந்த மயமாகும் மலைபோலே - எம்*
*ம்சேர் ம் ஆனந்த நடராசா ஆசானே நீர் வாழ்க !*

*சோம்பலறியாச் சுடர்விழியும்*
*ஆம்பலெனவே திருமுகமும்*
*காண்போரைக்களிப் பேற்றும் நா உதிர் மொழியும் - எம்*
*ஆசானை அகிலத்தில் உயர்த்திடுமே.....! அவர் வாழ்க !வாழ்க !*

*விளையாட்டுப் போட்டி என்றாலே - அவர்*
*சிறுபிள்ளை போலே மாறிடுவார்*
*தந்தையாய் தாயாய் பழக நல் நண்பனாய் - வாழ்வில்*
*தெய்வமாய் ஆன எம் ஆனந்த நடராச ஆசானே நீர் வாழ்க !*

விழிகளும் இமைத்திடாது அவர் திறமை காணுகையில் - செம்
மொழிகளும் தோற்றிடுமே அவர் புகழைப் பாடுகையில்
வழிகாட்டியாய் எம் வாழ்க்கையிலே வந்தவரே -எம்
பழியோட்டப் பாடங்கள் பல சொன்ன நாயகனே நீர் வாழ்க !

மணிவிழா நாயகனை மனமார வாழ்த்துகின்றோம் - அவர்
மனதிலே நாம் இருக்க தினம் இங்கு ஏங்குகின்றோம்
ஆனந்த நடராசா ஆசானே நீங்கள் வாழ்க - இவ்
அகிலத்தில் அரியணையில் அமர்ந்து அழகுடனே பல்லாண்டு வாழ்க !வாழ்க !





**கேதீஸ் பரம்சோதி**
நெறிப்படுத்துநர்
முத்தமிழ் பள்ளி கூட்டகம்
(School of Muththamizh corp.)
#42, Everridge Common SW,
Calgary, AB, T2Y 5G9, Canada.
school.of.muththamizh.corp@gmail.com

# உங்கள் மணி விழாவில் எங்கள் ஆனந்தம் !

*"ஓர் ஆசிரியன் ஏணியாய் இருந்து ஏற்றி விடுபவன்....!!"*
*இல்லை! இல்லை !!*

*அவன் தன் ஏணியில் பல ஏணிகளைக்*
*கட்டி ஒட்டுபவன்!*
*அவர் தான் எங்கள் மணிவிழா நாயகன்*
*எம்மினிய ஆசிரியன் ஆனந்த நடராசா அவர்கள்*

*இன்று ஆனந்தம் என்ற ஏணியில்....*
*கலைஞர்கள், விஞ்ஞானிகள்....*
*நிறுவுநர்கள், நிர்வாகிகள்,*
*முதல்நிலை ஆசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள்*
*பொறியியலாளர்கள், மருத்துவர்கள்....*
*சட்ட வல்லுநர்கள்.....*
*அப்பப்பா... எத்தனை.... ?! எத்தனை....?*
*இது எப்பேற்பட்ட ஏணி?*
*எல்லோரும் அறிவீர்கள்....*
*ஓர் அத்திவாரத்தின் பலமே*
*வானளாவ அண்ணாந்து பார்க்கும்*
*கட்டடத்தின் பலம்*
*இவ்வேணியின் உறுதியே*



இப்பேற்பட்ட பெருக்க ஆளுமைகளின்
பெருவீச்சு!!!!

நீங்கள் ஓர் ஞானத் தந்தையாய்....
எனக்குப் போதித்த சமூகக்கல்வி
வரலாற்றிலிருந்து...
என் தாய்மொழியாம் "தமிழ்" மொழியை
ஊட்டியதிலிருந்து...
அதனூடு நான் பெற்ற அடைவுகளால்.....
பல்கலைக்கழகம் என்ற உயர்கல்வியை
எட்டிப் பிடித்த போது
நீங்கள் அடைந்த அளவற்ற ஆனந்தத்தை
நான் அறிவேன்....
அங்கே தான் நான் கண்டேன்...
ஆனந்தம் எப்படி ஆனந்தமடையுமென்று....

உங்கள் இனிய கையொப்பத்துடன்
அன்பினால் அளித்த "ஆசாரக் கோவை"
என் இதயக் காப்பகத்தில்!
உங்கள் பெயர் சும்மா
"ஆனந்த நடராசா" இல்லை
உங்கள் மாணவர்களின் ஏற்றத்தால்
நீங்கள் அடையும் ஆனந்தமே உங்கள்
பெயரானது இது என் தரிசனம்!

இவ்வுலகில் எதுவும் இளைப்பாறுவதுமில்லை
ஓய்வெடுப்பதுமில்லை....!
ஓர் ஆலமரம் தன் கிளைகளை விரித்து
விழுதுகளை வேரூன்றிய பின் ... அங்கே
மூலவேர் தன் விசாலிப்பை நிறுத்தி விடுவதில்லை...
மாறாக காலப்போக்கில்
மூலவேர் எது? விழுது வேர் எது?
என்ற கேள்வி நிலைகள் கலைந்து
எல்லாம் ஓர் முழுமையின் தரிசனமாகிறது....


இம்மணிவிழா நாளுக்கு முன்
மூலவேர் தன் விழுதுகளுக்கு விழா எடுத்தது!
இன்று விழுதுகள் கூடி மூலவேருக்கு
மணிவிழா எடுக்கக் கிடைத்திருக்கும்
நிறைவின் பலம்! பெரும் பாக்கியம்!

நீங்கள் "தக்கார்"!

நீங்கள் ஏகலைவர்களிடமிருந்து
பெருவிரலைக்
கேட்காத துரோணர்!
உங்கள் வட்டத்தில் எல்லோரும்
பாண்டவர்களே!
உங்கள் வட்டம் மிக அழகானது!
ஏன் தெரியுமா?
இது எல்லைகள் அற்றது
இவ்வண்டம் போல்.

உங்கள் ஆசிரியத்துவம்
மாணவர்களுக்கு ஏற்றம்!
உங்கள் சக ஆசிரியர்க்கு எடுத்துக்காட்டு!
"ஓர் ஆசிரியன் சாதாரணமானவனல்ல"
- சாணக்கியன்

A Teacher is not ordinary
- Chanakya






**சிறீஸ்காந்தன் சரூபன்**
(பழைய மாணவன் A/L -2008)
பொருளியல் துறை,
கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

# முத்தமிழின் முகவரி

சேர்,
நீங்கள் சரித்திரம் !
உங்கள் பெரும் புகழ்
முழுவதும் பாட
கம்பனிடம் தமிழை நான்
கடன் வாங்க வேண்டும்
ஆவாரம் கையிலும்
பாவாரம் உதட்டிலும்
சுமந்து
ஓடோடி வந்தேன்
நடமாடும் ஒரு நூலகத்தை
தரிசிக்க
'நீங்கள் ஆலமரம்'
உங்கள் விழுதுகளின்
பிரவாகம் புவி முழுவதும்
உள்ளது.
அதிபராய் ஆசானாய்
வர்ணக்கலைஞனாய்
இலக்கியனாய்,
எழுத்தாளனாய்
எண்ணற்ற விழுதுகள்
நானும் உங்களில் உரிமை
என்பதில்
எனக்கும் அளவு கடந்த
பெருமை
உங்கள் உதட்டிலிருந்து
எம்மொழி உதிர்ந்திடினும்
கம்பனின் கவித்துவமும்
செம்மொழி தமிழ் எனும்
செழும் பெருமையும்
தெரிந்திடும்
ஒரு காலத்தில் கால்
ஒடிந்த
சிலந்தி போல் முடங்கிக்
கிடந்தேன்
எதிலும் முன்னேற
முடியாமல்
உங்கள் பார்வை பட்டதால்
தானே
உருப்பெற்றேன்
எங்கெல்லாம் வறுமை
வழிகிறதோ

அங்கெல்லாம்
உங்கள் கரம் நீளும் !
எங்கெல்லாம் அறிவுக்கனி
கிடைக்கிறதோ
அதையெல்லாம் உங்கள்
கரம் ஆயும்
முத்தமிழின் முகவரியே
எந்த
பித்தனையும் உம் தமிழ்
பேரறிவாளன் ஆக்கும்
மணிமுடி தரிக்காத மன்னன்
இன்று மணிவிழாக்காண்பது
மகிழ்வே !
என்னுடைய ஒரு நீண்ட
அவா
உங்கள் நூற்றாண்டு
விழாவிலும்
உங்களை வாழ்த்தும் வரம்
வேண்டும் எனக்கு.
உங்கள் சேவை தொடர
வேண்டும்
நீங்கள் 1000 ஆண்டுகள்
வாழ
வாழ்த்துகின்றேன்.





சு. றொபின்ஸ் கமில்டன்

சிரேஸ்ட மாணவ முதல்வன் - 2013

# எம் கல்லூரித் தாய்க்கு உன்னத பணி செய்தீர்

யா/சண்டிலிப்பாய் இந்துத் தாயானவள் வியாபித்துப் பெரு விருட்சமாக அகலக் கிளைபரப்பி கல்விப்பணி புரிந்து வருகின்றாள். இந்தக்கல்லூரித்தாயிடம் 19 வருடங்கள் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராகப் பணியாற்றி மணி விழாக் காணும் திரு . இ. ஆனந்தநடராசா ஆசானை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தெற்கிலும் உம் ஆசிரியப்பணியை வெற்றியோடு முடித்து எம்தாயின் பிள்ளைகளுக்குக் கல்விப்பணி செய்ய வந்தீர். அதிலே பலர்போற்றப் பணி செய்த உம்மை நன்றிப்பெருக்கோடு இவ்விழாப்புனைகின்றனர் நம் மாணவரும் பழைய மாணவரும்.

2003ஆம் ஆண்டு நீங்கள் எனக்கு அறிமுகமானீர்கள். காலப்போக்கில் உம் சீரிய கல்விப்போதனையில் நானும் ஒருவனானேன். 2007ஆம் ஆண்டு முதல்முறை பேச்சுப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றேன். இதன்மூலம் தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்புப் பெற்றேன். பிரதி அதிபரும் குகபரன் ஆசிரியரும் என்னைப் பேச்சுத் துறையில் வளர்த்தெடுத்தனர். அன்றுமுதல் அனைத்துத் துறைசார் பேச்சுப் போட்டியிலும் பங்குபற்றி வெற்றியும் பெற்றேன். தொடர்ந்து மாவட்டம், மாகாணம், அகில இலங்கை ரீதியில் முதலிடங்கள், பதக்கங்கள், கேடயங்கள், பணப்பரிசுகள், சான்றிதழ்கள், என எல்லாவற்றிற்கும் எனது தமிழ் ஆசானோடு சேர்ந்து வழிப்படுத்தி வளர்த்தெடுத்தவர் பிரதி அதிபர்.

உயர்தர வகுப்பிலே நாம் கற்கும்போது பாட ஆசிரியர் வரவில்லை என்றால் எமக்கு தானே வந்து கற்பிப்பார். ஒவ்வொரு பாடநேரமும் வந்து எம்மைக் கண்காணிப்பார். அத்தோடு வர்த்தகத்துறைசார் நூல்களைத் தன்பெயரில் பெற்று எமக்கு கற்க வழிகாட்டுவார். பல தடவை கேள்விகளையும் எமக்காகத் தயார்படுத்தித் தந்து எம்மை ஊக்கப்படுத்தினார். இவ்வாறு அனைத்து மாணவர்களின் கல்வியிலும் அக்கறை காட்டினார். கணிதபாடத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உயர்தர வகுப்பு மாணவர்கள் மூலம் கற்பித்தலை வழங்கினார்.

மாணவரது உளநிலைகளை ஆய்ந்தறிந்து அவர்களினுடைய மனநிலையைத் தெளிவுபடுத்தி கல்வியின்பால் ஈர்த்துச் செல்பவர். நாம் பாடசாலையில் முன்னெடுக்கும் செயற்பாடுகளின் குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி எமக்கு ஆலோசனைகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கினார். ஆசிரியர் தினம், வாணிவிழா, பரிசளிப்புவிழா, உயர்தர ஒன்று கூடல் என

எம்மால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து நிகழ்வுகளிற்கும் அதிபரோடு இணைந்து சிறப்பான வழிகாட்டலை வழங்கினார். கல்லூரியின் கல்வி மற்றும் இணைபாடவிதான ரீதியில் பெறப்படும் வெற்றிகளை எல்லோருடனும் உடனடியாகப் பகிர்ந்து இன்புறுவார். இதில் நாமும் விதிவிலக்கல்ல. ஆசிரியர் மாணவரின் இன்பதுன்பங்களை அனைவருடனும் பகிர்ந்து ஆசிரியர் மாணவர் உறவை வ்லுப்படுத்துபவர்.

கல்வி, நிர்வாகம் என ஒன்றுபட்டுப் பணி புரிந்து கல்லூரியைச் செம்மையுறச்செய்தீர். உமது கண்காணிப்பில் மாணவர்கள் பெட்டிப்பாம்புகளாய் அடங்கிவிடுவார்கள். அத்தகைய கண்டிப்பான பணி செய்தீர். கல்வியும் ஒழுக்கமும் இன்று உம்மால் எம் மாணவரிடத்தில் மிதமிஞ்சியிருக்கின்றது. இதற்கு எம் பெற்றோர் உமக்குத் தந்த ஆதரவும், சவால்களும் ஏராளம் அவற்றையெல்லாம் வெற்றி கொண்டீர்.

சண்டிலிப்பாய் இந்து முதன்முறையாக தேசியமாணவர் படையணி (NATIONAL CADET CORPS) யில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் **6**ஆம் இடம் பெற்றது. இதற்குத் தாங்களே காரணம். அனைத்து மாணவரையும் அதிகாலையில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பயிற்சிக்கு அனுப்பி மருத்துவச்சான்றுகள் தெரிவு போட்டிகள் என அனைத்திற்கும் பொறுப்போடு வழிகாட்டி தெற்கிலே சென்று பங்குபற்றி வெற்றி பெறச்செய்தமை நெஞ்சைவிட்டு அகலாதவை. இது எம் தாயின் சரித்திர வெற்றி.

எம் தாயின் கவிநிலை அழகானது. பசுமையான பூங்கன்றுகள் பூப்பந்தல்கள் இவை அனைத்திலும் எமது அதிபர்களதும் பிரதி அதிபரதும் கைவண்ணம் என்றும் இருக்கும். இதற்கு நூலக வாயிலில் உள்ள பூப்பந்தல் தகுந்த பதில் தரும். அதுமட்டுமா? இன்னும் எத்தனை எத்தனை பூமரங்கள் உம்மால் நடப்பட்டன. இதெல்லாம் உம் வீடென்று நீர் செய்தீர் அதை யாவருமே அறிவார்.

எம் கல்லூரித்தாய் கொடுத்து வைத்தவள். எமது அதிபர் ஆசிரியர் வாரம் முழுவதும் பணி செய்பவர்கள் அதிபரும் பிரதி அதிபரும் எந்நாளும் எம் தாயோடுதான் தம் தனிப்பட்ட கருமங்களைப் புறம்தள்ளி மாணவர் நலம்நோக்கிச் செயற்படுகின்றனர்.

'ஆசிரியத்துவம் உலகின் மிக

உயர்ந்த உன்னதமான பணி'

இது எமது அலுவலகத்தில் நான் கண்ட சுலோகம் அதன் உண்மையை என் கல்லூரித் தாயில் கண்டு கொண்டேன். பிரதி அதிபரின் 37 வருட ஆசிரிய சேவையினை சொற்களில் அடக்கிவிட முடியாது. அவர் பணி ஆலவிருட்சம் போன்றது.

நோயற்றவருக்கு அல்ல; நோயுற்றவருக்கே வைத்தியர் தேவை. என்பது யேசுநாதர் கருத்து. இதனை இவர் வாழ்வில் காணலாம். பின்தங்கிய நிலையில் காணப்பட்ட பலாங்கொடை பிரதேச மாணவர்களும் இவர் பணியில் மீட்சிபெற்று உயர் பதவிகளை அலங்கரிக்கின்றனர். அதே போலவே எமது கல்லூரியும் உயர் வளர்ச்சியில் சென்று கொண்டிருப்பதை பரீட்சைப் பெறுபேறுகளும் இணைபாடவிதான வெற்றிகளும் பல்கலைக்கழக அனுமதிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு கல்வி நிர்வாகம் என பரந்துபட்ட பணி வாழ்வில் வெற்றிகண்டு பல கல்விமான்கள் புடைசூழ, மணிவிழாக் காணும் எமது பிரதிஅதிபர் ஓய்வு காலத்தில் தன் குடும்பத்தோடு சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

# மாணவ முதல்வனின் வாழ்த்து

நீண்ட பிரகாசமான கல்விப் பாரம்பரியமுடைய சண்டிலிப்பாய் இந்துவின் மைந்தனான இளையதம்பி ஆனந்தநடராசாவின் அர்ப்பணிப்பு மிக்க சேவை காத்திரமானது. சிறந்த உத்தம குணங்கள் உடைய பெரும் புலமையாளர்களை உருவாக்கிய பெருமையுடையவர். இம் மைந்தன் எமது கல்லூரியில் 1995ஆம் ஆண்டு தமது பணியைத் தொடர்ந்தார். இவர் 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டு வரை உப அதிபராக விளங்கினார். இவரது அளப்பரிய சேவை இளைப்பாறும் வரை தொடர்ந்தது.

'தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந்தார்."

என்ற வாசகத்திற்கு இலக்கணமாய்த் திகழ்ந்த உத்தம மைந்தன் வசந்தமாக நிறைவாக வாழ்கின்றார். கல்லூரியின் பிரதி அதிபராய்த் திகழ்ந்து கல்லூரியின் நிமிர்வில் ஒருவராய் உழைத்த இவர் மிடுக்கானவர். இவர் மகிழும் பேச்சுக்கு சொந்தக்காரன். வயதால் ஓய்வு பெற்றாலும்; செயலால் என்றும் இளையவராய் பவனி வருகின்றார். கல்லூரியின் அனைத்து விழாக்களையும் அலங்கரித்தார். இவர் தமது மாணவர்கள் எப் பரீட்சைக்குத் தோற்றினும் எங்கு எப்போட்டியில் பங்குபற்றினும் அங்கு தாமே பிரசன்ன மாயிருந்து மாணவர்களை ஊக்குவிக்கும் பண்பை நினைந்து மாணவனாகிய நான் பெருமையடைவதுடன் வயதில் சிறியவனாகிய நான் உத்தமனுக்கும் மாணவர்கள் சார்பில் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜெ.ஹரிதாஸ்**

தரம் 13, வர்த்தகம்



# வாழ்த்திடுவோம் ஆசானை

சண்டிலிப்பாய் இந்து
அன்னையின் அரவணைப்பில்
பத்தொன்பது ஆண்டுகள் பணியாற்றி
மணிவிழாக்காணும்
எம் பிரதி அதிபரை
வாழ்த்துகின்றோம்
களிப்புடனே

எடுப்பான தோற்றத்தில்
சூறாவளி போன்று
சுழன்றடிக்கும் நடையில்
கல்லூரியைச் சுற்றி
ஆனந்தமாய் வலம் வரும்
எம் ஆசானைக் கண்டால்
அலறியடித்து ஓடுவார்கள்
எம் மாணவர்கள்


தத்தளிக்கும் மனதினை
தத்துவ பாடலுடனும்
பழமொழிக் கருத்துடனும்
கல்வியைக் கற்றுத்தந்து
காட்டிடுவார் இனிய
வெற்றிப் பாதையினை

சிறந்த ஆசானாகவும்
நண்பனாகவும் தந்தையாகவும்
எம்முடன் பழகும் எம் ஆசான்
பாடசாலை சேவையை முடித்து
ஓய்வுபெற்றுச் செல்லுகின்ற
வேளையிலே மனமுவந்து
வாழ்த்துவதோடு என்றும்
இனிய நினைவால்
வாழ்ந்திடுவார் எம் மனதிலே.

**இ.தனுசன்**
தரம் 13
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.









# இனிய நல்வாழ்த்துக்கள்

கலை உணர்வுடன் கம்பீரமான நடையுடன்
இறுமாப்பான முகத்துடன்
சண்டிலிப்பாய்
இந்து தனை
வலம் வர

உமது கால்கள் எத்தனை
காயப்பட்டிருக்கும்
பத்தொன்பது ஆண்டுகளும்
படிகள் மட்டுமல்ல படிக்கற்களும் நீர்தான்

கல்விக்கு மேலாக ஒழுக்கத்தையே போதித்த நீர்
மணிவிழாக்காணும் இவ்வேளையில்
உமது சேவைகளைப் பாராட்டாமல்
இருக்க முடியுமா?

ஒய்வு பெறும் காலம் வருகுதென எண்ணி
பாடசாலைச் சமூகமே கண்ணீர் வடித்திட
கல்லூரி அன்னையவள் கலங்கிக் கதறிட
மணிவிழா நாயகனே வாழி வாழி
எங்கள் செம்மலரே வாழி வாழி.

**ர.கிருத்திகா,**

தரம் $10^B$



# எம் ஆசான்

நவரசமும் முகத்தில் தவழ
அபிநயம் பலகாட்டும் எம்ஆசான்
பண்போடு பாரினிலே நாம் உயர
பல கலைகளை கற்றுத் தந்நீரே

காலங்கள் மாறிப்போனாலும்
கல்வியை சிறப்புற கற்பித்து
ஆயிரம் கல்விமான்களை
உருவாக்கிய அறிவுக்கடலே

பூமி சுற்றுவது உண்மையெனில்
காற்று வீசுவது உண்மையெனில்
நாளை சரித்திரம் சொல்லும்
உம் ஒழுக்க விழுமியங்களை

மீண்டும் ஒரு ஜென்மம்
எமக்கு உண்டு என்றால்
அங்கும் உம் பிள்ளைகளாக
நாமே வலம் வர வேண்டும்.

**சி. கொலன்சிகா**

A/L 2014
கலைப்பிரிவு

# அன்பு ஆசான்



அருள் வடிவே பரம்பொருள் வடிவே
ஆனந்தமே அருளே பொருளே புகழே
ஆனந்தத்தின் பிறப்பிடமே
தில்லை நடராஜனின் இருப்பிடமே

கனிவான பேச்சினிலே
கல்லையும் கவிபாட
வைக்கும் காவலனே
கணப்பொழுதில் நாம் மறவோம் உம்மை.

கதை கூறி கலகல சிரிப்பினிலே
காரியத்தை கச்சிதமாய் முடித்திடுவீர்
அடிமேல் அடிஅடித்தால் அம்மியும்
நகரும் என்ற வரிகளுக்கு இலக்கணமானவரே

'கலை கலாசாரத்தை கட்டிக்காத்திட வேண்டும்'
என்று உரைப்பீர் எமக்கு
சீருடை தொடக்கம் சிகையலங்காரம் வரை
தடி கொண்டு எமை தண்டிக்க துணிந்தவரே

அறிவுப்பால் ஊட்டவென்று ஆனந்தமாய் வந்தவரே
19 ஆண்டுகள் பிரதி அதிபராய் பிரசித்தி பெற்றவரே
எட்டுத்திக்கும் உம்புகழை எடுத்தியம்புவோம் இவ்வுலகில்
பிரியமுடன் வந்தவரே பிரியமாட்டோம் உமை என்றும்.

**த. பேணுதர்சிகா**
**தரம் 11B**

# எமது கல்லூரியில் நடமாடும் தெய்வம்

உங்கள் பணி ஓய்வு தனை
எங்கள் நெஞ்சம் ஏற்க மறுக்கின்றது.
உங்கள் சேவைக்கு எமது கல்லூரியில்
ஓய்வு எனும் பெயர் எதற்கு
அர்த்தம் அற்றதே!

புன் சிரிப்புடன் கையிற் பிரம்பு கொண்டு
மைதானம் தனில் நடமாடும்
ஆனந்த வடிவமே !

உங்கள் சேவைதனை - நாம்
வியக்கின்றோம் - இன்று
உங்கள் சேவைக்கால ஓய்வு நாள் அல்ல இது
ஏனெனில் எமது கல்லூரி வரலாற்றில்
உங்கள் பணி தொடருந்துப் பயணமே.....
நீங்கள் செல்லும் திசையெங்கும் சிறக்க
சீரணி நாக பூஷணி அம்பாளை
அகமார வேண்டுகின்றேன்.

**க.கனெக்ஸ்**

$6^{B}$



# நன்றி

ஆசிச் செய்தி அளித்தோர்

வாழ்த்துரை வழங்கியோர்

பட்டறிவு பகிர்ந்தோர்

ஒப்பு நோக்கியோர்

அச்சழகு செய்தோர்

களத்திலும் புலத்திலும்

நிதிப்பலம் சேர்தோர்

அனைவருக்கும் நிறைந்த நன்றி





நீங்கள் "தக்கார்"!

நீங்கள் ஏகலைவர்களிடமிருந்து
பெருவிரலைக் கேட்காத துரோணர்!
உங்கள் வட்டத்தில் எல்லோரும்
பாண்டவர்களே!
உங்கள் வட்டம் மிக அழகானது!
ஏன் தெரியுமா?
அது எல்லைகள் அற்றது
இவ்வண்டம் போல்.

உங்கள் ஆசிரியத்துவம்
மாணவர்களுக்கு ஏற்றம்!
உங்கள் சக ஆசிரியர்க்கு எடுத்துக்காட்டு!

- ப.கேதீஸ்

ஆபிரகாம் லிங்கன்களின்
தெருவிளக்கே,
உங்கள் வெளிச்சத்தால்
நாங்கள் தலைவர்களானோம்!
தமிழால் எங்களை நனைத்த
மொழியின் முகிலே,
இன்று நாங்கள்
கோபுரத்துக் குயில்கள்
நீங்கள் எங்களை அடைகாத்த
அதிசயக் கூடு!!
விதி தெரியாத
வீதிவிடங்கர்களின்
சரியான சாரதியே,
எங்கள் பயணங்களில்
இனி பயமில்லை
இது விடைசொல்லும் வேளையல்ல
நீங்கள் பழகப் பழகப்
புளிக்காத பால்!
எங்கள் கல்லூரி வைப்பகத்தில்
நீங்கள் ஓர் அடகுப்பொருளல்ல,
எப்போதும்
நீங்கள் நிலையான வைப்பு!!

- என்.தனுசுஜன்

Harikanan, Jaffna.